விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

*Valampurii*

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

பக்கங்கள்: பதினான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 25 ஞாயிற்றுக்கிழமை (09.07.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 202

# மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் யாழ்.இராணுவத்தளபதியுடன் சந்திப்பு

## பல்வேறு விடயங்களுக்கு தீர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவினருக்கும் யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறிக்குமிடையிலான முக்கிய சந்திப்பொன்று நேற்று இடம் பெற்றுள்ளது.

இச் சந்திப்பில் ,பொதுமக்கள்மீது இராணுவத்தினரால் ஏற்படும் தாக்குதல்கள், அசௌகரியங்கள் குறித்து உடனடியாக மனித உரிமை ஆணைக்குழுவுக்கோ, இராணுவத்தினருக்கோ அறிவிக்கும் பட்சத்தில் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என இணக்கம் காணப்பட்டுள்ளது. (14 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம் மீது கிரனைட் தாக்குதல்

பருத்தித்துறை கோழிக்கடைச் சந்திக்கு அருகில் காவற்கடமையில் நின்றிருந்த இராணுவத்தினர் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட கைக்குண்டுத்தாக்குதலில் இரு இராணுவச் சிப்பாய்கள் படுகாயமடைந்துள்ளனர்.நேற்று நண்பகல் 11.45 மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இராணுவத்தினர் மீதான தாக்குதலையடுத்து அவர்களும் பதில் தாக்குதல் நடத்தினர். இதேவேளை காயமடைந்த இருவரும் பலாலி இராணுவவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (14 ஆம் பக்கம் பார்க்க)

## அல்லைப்பிட்டியில் தலையில்லாத சடலம்

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி காளிகோவிலடி கடற்கரையில் தலையில்லாத நிலையில் சடலம் ஒன்று கரையொதுங்கியுள்ளது.

உரப்பையினால் கட்டப்பட்ட நிலையில் கரையொதுங்கிய சடலம் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சடலம் உரிமை கோரப்படாத நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ச-133)


## யாழ். நகரில்வைத்து இளைஞன் மீது சூடு

.நேற்றுக் காலை 8 மணியளவில் யாழ். போதனாவைத்தியசாலைக்கு எதிர்ப்புறத்தில் அமைந்துள்ள துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்திற்கு முன்னால் இனந்தெரியாத ஆயுததாரிகளால் இளைஞர் ஒருவர் சுடப்பட்டுள்ளார்.தனது துவிச்சக்கர வண்டிச் சக்கரத்திற்கு காற்றடித்துக் கொண்டு புறப்படத்தயாரான வேளையிலேயே கந்தர்மடத்தைச் சேர்ந்தவரும் ஒரு பிள்ளையின் தந்தையுமான ஆர்.பிரேம்குமார் (வயது 25) என்ற இளைஞரே சுடப்பட்டவராவார்.

வலது கையில் மூன்று சூட்டுக் காயங்களுடன் உயிர் தப்பிய அவர் ஒரே ஓட்டமாக போதனாவைத்தியசாலையின் 24 ஆம் இலக்க வாட்டுக்குள் ஓடித்தப்பியதாக தெரிகிறது.

இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்த போது அவ்விடத்தில் தனது வியாபாரத்தை கவனித்துக் கொண்டிருந்த நடைபாதை வியாபாரி ஒருவரும் கையில் சூட்டுக்காயங்களுக்கு இலக்காகி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொக்குவில் கோணாவளை ஒழுங்கையில் வசிக்கும் நாலு பிள்ளைகளின் தந்தையான அருணாசலம் சண்முகராஜா (வயது 41) என்பவரே காயமடைந்த நடைபாதை வியாபாரி ஆவார்.துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான பிரேம்குமார் என்பவர் புளொட் இயக்க உறுப்பினர் என தெரிவிக்கப்படுகிறது. (து-133)



வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினை நாகபூசணி அம்மனுக்கு இன்று தேர்.

## காணாமல் போன ஒன்பது பேர் தென்னிலங்கைச் சிறைகளில்

கடந்த ஆறு மாதங்களில் காணாமல் போனதாக கருதப்பட்ட ஒன்பது யாழ்.இளைஞர்கள் மற்றும் யுவதிகள் தென்னிலங்கை சிறைகளில் உள்ளனர் என்று காணாமல் போனவர்கள் தொடர்பாக மனித உரிமைகள் அமைப்பு நடத்திய நேரடி விசாரணைகளின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு காணாமல் போனதாக அஞ்சப்பட்ட ஒன்பது பேரில் இருவர் பெண்கள் ஆவர். மூவர் யாழ்ப்பாணத்தில் பிடிக்கப்பட்டு தென்னிலங்கைக்கு கொண்டு செல்லப்பட்டவர்களாவர்.

யூன் 27 கொடிகாமத்தில் கைதான இராசையா ஆனந்தராசா,மே 6 இல் கொழும்பில் கைதான மட்டுவில் வடக்கைச்சேர்ந்த செல்லத்துரை ஜனந்தன், ஏப்பிரல் 27 இல் கொழும்பில் கைதான நாவற்குழியைச் சேர்ந்த வடிவேல் தயானி ,ஏப்ரல் 25 இல் கொழும்பில் கைதான காங்கேசன்துறையைச் சேர்ந்த கந்தசாமி ஜெயசங்கர் , ஏப்ரல் 25 இல் கொழும்பில் கைதான பண்டத்தரிப்பைச்சேர்ந்த நவரட்ணம் சத்தியசீலன், ஏப்ரல் 27 இல் கொழும்பில் கைதான உரும்பிராய் வடக்கைச்சேர்ந்த அரியராசா சிவாஜினி, மே 27 இல் கொழும்பில் கைதான சங்கானையைச் சேர்ந்த (14 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்களை கொள்வனவு செய்யவே அமைச்சர் மங்கள சீனாவுக்குப் பயணம்

### இணையத்தளம் சுட்டிக்காட்டு

போர் ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்காக கலந்துரையாடவே வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சீனா செல்லவுள்ளதாக அசோசியட் பிறஸ் என்ற இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆயுதக்கொள்வனவு தொடர்பாக நகல் ஒன்றை எதிர்வரும் 12 ஆம் திகதி பீஜிங் கில் வைத்து சீன வெளிவிவகார அமைச்சர் லிச யோக்சிங்கிடம் அவர் கையளிக்கவுள் ளார்.

சீனாவிடம் இருந்து கனரக ஆயுதங்களை ஏற்கனவே இலங்கை கொள்வனவு செய்துள் ளது. எனினும் வெளிவிவகார அமைச் சின் 'பேச்சாளர் இது தொடர்பாக தற்போது விளக்கமளிக்க முடியாது (14 ஆம் பக்கம் பார்க்க)

## உலகக்கோப்பை உதைபந்தாட்டம்

**ஜேர்மனி 2006- இறுதிப்போட்டி இன்று பேர்லினில்**

**இத்தாலி எதிர் பிரான்ஸ்;இலங்கை நேரம் இரவு 11.30**

## கொழும்பு குண்டுத்தாக்குதல் யாழ்ப்பாண இளைஞன் கைது

(கொழும்பு)

லெப்டினன் ஜெனரல் ப்ரமி குலதுங்க கொலை தொடர்பாக மேலும் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இவர் கைதுசெய்யப்பட்டதாக கொழும்பு சிரேஷ்ட அத்தியட்சகர் சரத் லூகொட தெரிவித்துள்ளார்.பரமி குலதுங்க தொடர்பான முக்கிய தகவல்கள் வெளியாகி வருவதாகபாதுகாப்பு தரப்பினர்மேலும்தெரிவித்துள்ளனர். (ச-9)

## ஈழத்தமிழருக்கு ஆதரவாக சென்னையில் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக சென்னையில் நேற்று பேரணி ஒன்று நடத்தப்பட்டது. விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் ஏற்பாட்டில் இப் பேரணி நடைபெற்றது.

இப் பேரணியில் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் தொல்.திருமாவளவன், தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழநெடுமாறன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.'இந்திய தமிழக அரசே ஈழத்தமிழரை காப்பாற்று' 'தமிழக அரசே ஈழத்தமிழரை காப்பாற்ற இந்திய அரசை வற்புறுத்து'. போன்ற கோஷங்களை வான் அதிர எழுப்பினர். (ச-5)

## ஈழ இளைஞன் மீது சென்னையில் தாக்குதல்

(சென்னை)

மண்டபம் அகதி முகாமில் இருந்த இலங்கை இளைஞன் ஒருவர் தமிழகப் பொலிஸாரால் அடித்து துன்புறுத்தப்பட்டுள்ளார்.

மண்டபம் முகாமில் பொலிஸாரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ள நிலையில் அவர் தாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைக்கண்டித்து இலங்கைத் தமிழ் அகதிகள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனை (14 ஆம் பக்கம் பார்க்க)

# உலகக் கோப்பை உதைபந்தாட்டம் 2006





## இறுதிப்போட்டி


இத்தாலி



பாபியோ




பிரான்ஸ்



ஜிடேன்

### இறுதிப் போட்டிக்கு முன்னேறிய விதம்

இத்தாலி | பிரான்ஸ்

| கானா | | அமெரிக்கா | | செக். | | ஆஸி. | | உக்ரைன் | | ஜெர்மனி | | எதிரணி | ஸ்விஸ் | | கொரியா | | டோகோ | | ஸ்பெயின் | | பிரேசில் | | போர்த்துக்கல் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 0 | 1 | 1 | 2 | 0 | 1 | 0 | 3 | 0 | 2 | 0 | கோல் | 0 | 0 | 1 | 1 | 2 | 0 | 3 | 1 | 1 | 0 | 1 | 0 |
| 13 | 4 | 3 | 0 | 4 | 8 | 6 | 4 | 7 | 7 | 10 | 2 | கோல் முயற்சி | 3 | 4 | 4 | 2 | 9 | 2 | 5 | 2 | 9 | 1 | 4 | 5 |
| 8 | 22 | 13 | 24 | 15 | 18 | 17 | 26 | 15 | 31 | 19 | 21 | தவறுகள் | 18 | 18 | 20 | 10 | 12 | 22 | 23 | 29 | 17 | 22 | 11 | 18 |
| 12 | 4 | 7 | 3 | 3 | 4 | 2 | 2 | 1 | 3 | 12 | 4 | கார்னர் கிக் | 4 | 1 | 6 | 2 | 9 | 1 | 5 | 8 | 7 | 5 | 3 | 8 |
| 3 | 2 | 2 | 2 | 3 | 0 | 3 | 3 | 0 | 3 | 1 | 2 | மஞ்சள் அட்டை | 3 | 5 | 2 | 2 | 1 | 3 | 3 | 1 | 3 | 4 | 1 | 1 |
| 0 | 0 | 1 | 2 | 0 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | சிவப்பு அட்டை | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 47 | 53 | 54 | 46 | 49 | 51 | 41 | 59 | 41 | 59 | 57 | 43 | பந்து மீதான ஆதிக்கம் % | 51 | 49 | 52 | 48 | 56 | 44 | 39 | 61 | 45 | 55 | 41 | 59 |

### உலகக் கோப்பை பைனல்களில் நேருக்கு நேர்

| | | |
|---|---|---|
| 2 | வெற்றி | 1 |
| 1 | டிரா | 1 |
| 1 | தோல்வி | 2 |
| 5 | கோல்கள் | 4 |

| | |
|---|---|
| 1998 செயின்ட்-டெனிஸ் (பிரான்ஸ்) இத்தாலி - பிரான்ஸ்* | 3 : 4 |
| 1986 மெக்சிகோ சிட்டி (மெக்சிகோ) இத்தாலி - பிரான்ஸ் | 0 : 2 |
| 1978 மார் டெல் பிளாடா (அர்ஜென்டினா) இத்தாலி - பிரான்ஸ் | 2 : 1 |
| 1938 கொலம்பஸ்-பாரிஸ் (பிரான்ஸ்) இத்தாலி - பிரான்ஸ் 3:1 | 3 : 1 |

### முந்தைய உலகக் கோப்பை போட்டிகளில்...

| | | |
|---|---|---|
| 15 | தகுதி பெற்றது | 11 |
| 5 | முதல் சுற்று | 6 |
| 2 | 2வது சுற்று | 0 |
| 1 | கால் இறுதி | 1 |
| 1 | 4வது இடம் | 1 |
| 1 | 3வது இடம் | 2 |
| 2 | பைனலில் தோல்வி | 0 |
| 3 | சாம்பியன் பட்டம் | 1 |

தகவல்: பிபா * பெனால்டி ஷூட் அவுட்

இடது புறம் இத்தாலி அணி பற்றிய விவரங்களும், வலது புறம் பிரான்ஸ் அணி விவரங்களும் தொகுக்கப்பட்டுள்ளன. லீக் போட்டிகள், 2வது சுற்று, கால் இறுதி மற்றும் அரை இறுதி போட்டிகளில் இந்த அணிகளின் செயல்பாடு விளக்கப்பட்டுள்ளது. எதிர்த்து விளையாடிய அணிக்கு எதிராக அடித்த கோல், வாங்கிய மஞ்சள் அட்டை, சிவப்பு அட்டை...போன்ற விவரங்களும் உள்ளன.

## சாதனை படைக்கக்காத்திருக்கும் இத்தாலி கோல் கீப்பர் பபுண்

இத்தாலி அணி இந்த உலகக்கோப்பையில் ஒரு கோல் கூட வாங்கவில்லை.

இதற்கு முக்கிய காரணம் அந்த அணியின் கோல்கீப்பர் பபுண் தான். அவர் 453 நிமிடங்கள் இப்போட்டித்தொடரில் எதிரணியினரை கோல் அடிக்காமல் தடுத்துள்ளார். அவர் பிரான்ஸிற்கு எதிரான இன்றைய போட்டியிலும் கோல் விழாமல் தடுத்து விட்டால் அதிக நிமிடங்கள் எதிரணியை கோல் போடவிடாமல் தடுத்தவர் என்ற சாதனையைப்படைப்பார்.

இதற்கு முன்பு 1990 ஆம் ஆண்டு உலகக் கோப்பையில் இத்தாலியின் வால்டர் 517 நிமிடம் எதிரணியைக்கோல் போடவிடாமல் தடுத்துள்ளதே சாதனையாகவுள்ளது.

தொகுப்பு அமிர்தன்

## ஜேர்மனியின் லூகாஸ் பொடோல்ஸ்கி சிறந்த இளம் வீரராக தெரிவுசெய்யப்பட்டார்



உலகக்கோப்பை உதைபந்தாட்டம் 2006 இல் மிகச் சிறந்த இளம் வீரராக ஜேர்மனி அணியைச் சேர்ந்த லூகாஸ் பொடோல்ஸ்கி தெரிவு செய்யப்பட்டுள்ளார். உலகக் கோப்பை உதைப்ந்தாட்டப் போட்டியில் சிறந்த இளம் வீரர் தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கப்படுகிறது.

இந்த உலகக்கோப்பைப் போட்டியில் ஜேர்மனி அணியைச்சேர்ந்த 21 வயதான லூகாஸ் பொடோல்ஸ்கியை பிபா தொழில்நுட்பக்குழு தெரிவுசெய்துள்ளது.

இந்த விருதுக்காக நடத்தப்பட்ட இணையத்தள வாக்கெடுப்பில் போர்த்துக்கல் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு அதிக ஆதரவு கிடைத்திருந்தது.

ஆர்ஜென்டீனா வீரர் மெஸ்சி இரண்டாவது இடத்திலும், ஈகுவாடர் வீரர் லூயிஸ் வாலென்ஸியாவுக்கு மூன்றாவது இடமும் கிடைத்திருந்தது.

வாக்கெடுப்பில் பொடோல்ஸ்கி நான்காவது இடமே கிடைத்திருந்தது. ஆனால் பிபா தொழில்நுட்பக்குழு முடிவின்படி லூகாஸ் பொடோல்ஸ்கி சிறந்த இளம் வீரராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். 1985 ஆம் ஆண்டு ஜனவரிக்கு பின் பிறந்தவர்கள் தான் இந்த விருதுக்கு தகுதியுடையவர்கள். சிறப்பான ஆட்டமும், விதிமுறைக்கு மாறாக ஆடாமல் இருத்தல் வேண்டும்.

## நட்சத்திரங்கள்


பிரான்ஸ்



### தியரி ஹென்றி

முன்கள வீரர்
கழகம் ஆர்செனல்
சர்வதேசப்போட்டிகள் :- 36
சர்வதேச கோல்கள் :-84
ஜேர்மனி 2006 இல் :-3 கோல்
உலகின் தலைசிறந்த தாக்குதல் வீரர் ஆர்செனல் கழகத்திற்காக 7 பருவகாலத்தில் விளையாடியுள்ளார்.

இத்தாலி



### லூகா டோனி

முன்கள வீரர்
கழகம் புளோரன்டினா
சர்வதேசப்போட்டிகள் :- 23
சர்வதேச கோல்கள் :- 09
ஜேர்மனி 2006 இல் :- 02 கோல்
இதுவரையில் 9 உதைப்பந்தாட்ட பருவகாலத்தில் விளையாடி ஏ பிரிவு மற்றும் தேசிய அணியின் முதல் தர தாக்குதல் வீரர் என்ற பெருமைமையைப் பெற்றுள்ளார்.

# தமிழகம் சென்ற ஈழ அகதிகள் வேறு முகாம்களுக்கு மாற்றம்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து தமிழகம் நோக்கி கடந்த ஜனவரி மாதம் 12 ஆம் திகதியிலிருந்து இதுவரை 4 ஆயிரத்து 231 பேர் அகதிகளாக சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாளுக்கு நாள் தமிழகம் நோக்கி செல்லும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் மண்டபம் முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த 4 ஆயிரத்திற்கு மேற்பட்ட அகதிகளில் ஆயிரம் பேர் இட நெருக்கடி காரணமாக வேறு மாவட்ட முகாம்களுக்கு மாற்றப் பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இராமேஸ்வரம் மண்டபம் பகுதியில் அமைந்துள்ள இலங்கை அகதிகள் முகாம் சுமார் 210 ஏக்கர் பரப்பளவை கொண்டமைந்துள்ளது. கடந்த ஜனவரி மாதம் 12ஆம் திகதியிலிருந்து இம் மாதம் 4ஆம் திகதி வரை இந்த முகாமுக்கு ஆயிரத்து 338 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 231 பேர் இலங்கையிலிருந்து அகதிகளாக வந்துள்ள னர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனால் இங்கு இட நெருக்கடியும், வசதியின்மையும் ஏட்பட்டுள்ளதையடுத்து அகதிகளில் பலர் வேறு முகாம்களுக்கு தங்களை அனுப்புமாறு கோரிக்கை விடுத்திருந்தனர் என்றும் இதையடுத்து மாநில மறுவாழ்வுதுறை ஆணையரின் ஒப்புதலுக்கமைய ஆயிரம் பேர் வேறு முகாம்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்றும் அந்த ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

18 குடும்பங்களை சேர்ந்த 73 பேர் திருச்சி கொட்டப்பட்டு முகாமிலும், 15 குடும்பங்களைச் சேர்ந்த 60பேர் விழுப்புரம் மாவட்டம் சின்னசேலம் முகாமிலும், 22 குடும்பங்களைச் சேர்ந்த 75 பேர் திருச்சி மாவட்டம் வாழ வந்தான் கோட்டை முகாமிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய 950 பேரும் வேறு மாவட்ட முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே இருந்த 756 அகதிகளுடன் சேர்ந்து தற்போது மண்டபம் அகதிகள் முகாமில் சுமார் 4 ஆயிரம் அகதிகள் தள்ளியுள்ளனர்.

மேலும் அகதிகள் வந்தால் அவர்களை அனுப்பி வைப்பதற்கு ஏதுவாக இடவசதி உள்ள வேறு முகாம்கள் குறித்து மறுவாழ்வுத்துறை அதிகாரிகள்கணக்கெடுத்து வருகின்றனர் என்றும் அந்த ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# ஊர்காவற்றுறை லயன்ஸ் கழக ஏழாவது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை லயன்ஸ் கழகத்தின் ஏழாவது ஆண்டு நிறைவு விழாவும் நடப்பாண்டுக்கான நிர்வாக சபையினரின் அங்குரார்ப்பண வைபவமும் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கழகத்தலைவர் லயன் எஸ்.நித்தியானந்தன் (ஜே.பி) தலைமையில் நடைபெறவுள்ளது.

நடப்பாண்டுக்கான புதிய தலைவராக லயன் கே.கங்கை வேணியன் (ஜே.பி) பொறுப்பேற்கவுள்ளார். இவ்விழாவில் பிரதம விருந்தினராக மாவட்ட இணைப் பாளர் லயன் வி.எஸ். சொக்கலிங்கம் ஜே.பி.யும் லயன் சீமாட்டி சந்திரா தேவி சொக்கலிங்கமும், கௌரவ விருந்தினராக மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அங்கத்தவர்கள் ஆற்றிய நீண்ட பயனுள்ள சேவையை நினைவு கூரும் முக்மாக அங்கத்தவர்களையும் அவர்களின் லயன் சீமாட்டிகளையுமத நலிந்த மக்களுக்கு சேவையற்ற உதவிய கனவான்களையும் கௌரவிக்கும் நிகழ்வும் அன்றையதினம் நடைபெறவுள்ளதாகவும் கழகச் செயலாளர் லயன் ஐ.கோ.சந்திரசேகரம் ஜே.பி.தெரிவித்துள்ளார். (அ)

# சுற்றாடலை அசுத்தமாக வைத்திருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமாம்

## மருத்துவ அதிகாரி டி.மெண்டிஸ் தெரிவிப்பு

டெங்கு வைரஸ் காய்ச்சலுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை இவ்வருடம் அதிகரிக்கக் கூடிய அச்சம் நில்வுவதாக சுகாதாரப் பராமரிப்பு, போஷாக்குத்துறை அமைச்சின் நோய் பரவுகை தடுப்புப் பிரிவு மருத்துவ அதிகாரி டி.மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

இதன் விளைவாக நுளம்புகள் பெருகாத வகையில் ரயர்களை அப்புறப்படுத்தவோ, களஞ்சியப்படுத்தவோ தவறுகின்றவர் களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும்படி பிரதேச சுகாதார அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங் கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில், கடந்த வருடம் (2005) டெங்கு வைரஸ் காய்ச்சலுக்கு 5 ஆயிரத்து 965 பேர் உள்ளாகியதுடன் அவர்களில் 28 பேர் உயிரிழந்துள்ளனர். ஆனால் இவ்வருடம் முதல் ஆறு மாதத்தில் 4 ஆயிரத்து 616 பேர் டெங்கு வைரஸ் காய்ச்சல் நோயாளர்களாக இனங்காணப்பட்டதுடன் அவர்களில் 17பேர் உயிரிழந்ததாகவும் தெரியவந்துள்ளது.

இதன்படி இவ்வருடம் டெங்கு வைரஸ் காயச்சலுக்கு உள்ளாகக் கூடியவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதோடு உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரிப்பதற்கான சூழலே நிலவுகிறது.

இவ் வைரஸ் காய்ச்சலுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை கொழும்பு, கம்பஹா, குருணாகல் போன்ற மாவட்டங்களில் அதிகமாக காணப்படுவதுடன் உயிரிழப்போரின் எண்ணிக்கையும் அதிகமாகக் காணப்படுகிறது.

இலங்கையில் டெங்கு வைரஸ் காய்ச்சல் வருடம் விட்டு வருடம் தீவிரமடைந்து வருகின்றதற்கு காரணம் முறையாகத் திட்டமிடப் படாதநகராக்கலும், கழிவுப்பொருட்களை முறையாக அகற்ற மக்கள் ஒத்துழையாமையுமே ஆகும்.

மேலும் நீர் தேங்க முடியாத வகையில் சுற்றாடலை சுத்தமாக வைத்திருப்பதற்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அரை மணி நேரம் வீட்டுச் சுற்றாடலை சுத்தப்படுத்தும்படி மக்களுக்கும், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அரை மணி நேரம் பாடசாலை வளாகத்தை சுத்தப்படுத்தும்படி பாடசாலை நிர்வாகத்தினருக்கும், அறிவுறுத்தப்படுவதோடுஇதனால் டெங்கு நுளம்புகளின் பெருக்கத்தை பெரிதும் குறைத்து விடலாம்.

இவ் வருடம் டெங்கு வைரஸ் காய்ச்சல் தீவிரமடைவதைத் தவிர்ப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள மக்களின் ஒத்துழைப்பு மிக மிக அவசியம் என்றும், இதன்ால் டெங்கின் தாக்கத்தை தீவிரமடையாது தடுக்கலாம் என்றும் டி.மெண்டிஸ் கூறினார். (க-7)

# புலிகளுக்கு சொகுசு வாகனங்களை விற்றவர்கள் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

இரண்டு கோடி ரூபா பெறுமதியான சொகுசு வாகனமொன்றைக் கடத்தி விடுதலைப்புலிகளுக்கு விற்றமை தொடர்பான விடயங்களை வெளிப்படுத்தியுள்ள போலிய கொடை குற்றத் தடுப்பு குழுவினர், இராணுவத்திலிருந்து தப்பிச்சென்ற கப்டன் உட்பட கொள்ளைக்குழுவினரை கைது செய்துள்ளனர் என சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குழுவினரால் கொள்ளை யடிக்கப்பட்ட வாகனங்களில் ஒரு கோடி ரூபா பெறுமதியான பிராடோ ரக ஜீப், மோட்டார் வாகனம் வேன் ஆகியனவும் அடங்கும். போலிய கொடை குற்றத்தடுப்பு பிரிவினரால் பத்திரமுல்ல, கேகாலை, திஸ்ஸ மஹாராம, இரத்மலானை, ரன்ன பகுதிகளிலேயே கொள்ளையர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆறு பேரைக்கொண்ட மேற்படி கொள்ளைக் குழுவில் வங்கி அதிகாரி ஒருவரும் சம்பந்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் கடத்தும் வாகனங்களில் அதிகமானவற்றை விடுதலைப்புலிகளுக்கே விற்றதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

போலியகொடை குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட மூன்று வாகனங்களும் விடுதலைப்புலிகளுக்கு விற்பனை செய்யப்படவிருந்தது என்றும், கொள்ளையர் குழுவில் இணைந்துள்ள இராணுவ கப்டன் குரு விட்ட இராணுவ முகாமில் சேவையாற்றியவர் என்றும் அவர் வடக்கு-கிழக்கு பகுதிகளில் சேவையாற்றிய போது புலிகளுடன் தொடர்பு கொண்டுள்ள தமிழ் வத்தகர் ஒருவருடன் தொடர்பு கொண்டிருந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர் என்றும் அந்த சிங்கள ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-9)

## மணி பல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

## இன்று தேர்த் திருவிழா

## அஞ்சேல் என்பாய் ஓடிவந்தே

இழைக்கும் வினைவழியே அடும்
காலன் எனை நடுங்க
அழைக்கும் பொழுது வந்து அஞ்சல்
என்பாய் அத்தர் சித்தம் எல்லாம்
குழைக்கும் களபக் குவி முலை
யாமளைக் கோமளமே!
உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே
என்பன் ஓடி வந்தே!

*அபிராமி அந்தாதி*

## சந்ததியைக் காத்திடவே தேரேறிவருகின்றாள்

வண்ணமிகு தேரினிலே நாகம்மை வருகின்றாள்
வளமான வாழ்வளிக்க நாகம்மை வருகின்றாள்
எண்ணமிதில் நிறைந்திருக்கும் நாகம்மை வருகின்றாள்
எல்லோரும் போற்றிடவே நாகம்மை வருகின்றாள்
பக்தரிசை பாடிடவர நாகம்மை வருகின்றாள்
பரவசத்தில் ஆடிவர நாகம்மை வருகின்றாள்
சக்தியவன் அருளிடவே தேரேறி வருகின்றாள் - தமிழ்ச்
சந்ததியைக் காத்திடவே தேரேறி வருகின்றாள்.

*மு.முத்துக்குமார்*

## தேரேறி வருகிறாள்

தேரேறி வருகிறாள் நாகபூஷணி
தேச நலன் காக்கிறாள் நாகபூஷணி
போரோய வைக்கிறாள் நாகபூஷணி
புது வாழ்வைத் தருகிறாள் நாகபூஷணி
ஊர்கூட்டி வருகிறாள் நாகபூஷணி
உரிமைகளை சேர்க்கிறாள் நாகபூஷணி
சீர் பெருக்க வருகிறாள் நாகபூஷணி
சித்திரத் தேரேறிவருகிறாள் நாகபூஷணி

*அ.கலாநிதி*

## அருள் செய்வாய் அம்மா

ஐந்துதலை அரவின்கீழ் அமர்ந்தருளும்
அம்பிகையே நயினையுறை நாகம்மாளே!
வெந்துமனம் வாடுகின்றார் தமிழரெல்லாம்
வில்லங்கம் தீர்வதுதான் எந்தநாளோ
அந்தமிலாத் துன்பமுடன் எங்கள்வாழ்வு
ஆறைந்து ஆண்டுகள் மேல் கழிந்து போச்சு
செந்தமிழர் படுந்துயரச் சுமையைப் போக்க
சித்திரத்தேர் ஏறியருள் செய்வாய் அம்மா!

*நயினை இராகுலன்*

## "அழகான தேரேறி வாவா!"

அழகான தீவினில்
ஆலயம் கொண்டவளே
அமுதம் அளிக்கும்
அற்புதத் தாயவளே
அழகான தேரேறி
ஆலய வீதியிலே
ஆடி அசைந்து
அடியாரின் முகம் குளிர
அன்னையாய் நீயும்
ஆணிப்பொற் தேரேறி
அடியார்க் கருள் சுரங்க
ஓடிவருவாய் உளங்களிப்ப
வந்திடுவாய்!

*அரியாலையூர் சி.சிவதாசன்*

## இன்று ஒரு தகவல்

# உயிர் வாழ்க்கை

ஒரு சமயம் வயதான ஒருவர் புத்தரிடம் வந்தாராம். கொஞ்சக் காலம் அங்கேயே இருந்தார். உண்மையான துறவியாக ஆகிவிட்டாராம் அந்த சீடரும். ஒருநாள் புத்தர் அவரைக் கூப்பிட்டார் "துறவியாரே! உங்களுக்கு இப்போது வயது என்ன?" என்று கேட்டார். அதற்கு அந்த சீடர் "ஐந்து வயதாகிறது" என்றாராம்.

இதைக் கேட்டதும் புத்தருக்கு ஆச்சரியம். "உங்களுக்கு 70 வயதிற்கு மேல் இருக்கும்.ஆனால் ஐந்து வயதுதான் ஆகிறது என்று சொல்கிறீகளே! என்ன காரணம்?" என்று கேட்டார். அதற்கு அந்த சீடர் "ஏன் அப்படிச் சொல்கிறேன் என்றால் உண்மையான ஞானம் எனக்குக் கிடைத்து ஐந்து வருடம் தான் ஆகிறது. அன்பு என் உள்ளத்தில் தோன்றியிருப்பதும் இந்தக் காலத்தில் தான். இதற்கு முன்பு நான் வாழ்ந்த வாழ்க்கை ஒரு கனவுபோல் தோன்றுகிறது. அந்த வாழ்க்கையினால் எந்தப் பலனுமில்லையென தோன்றுகிறது. அதனால்தான் எனக்கு ஐந்து வயது என்று சொன்னேன்" என்றாராம்.

அவர் ஐந்து வருடம் தான் இந்த உலகில் வாழ்ந்ததாக நினைக்கிறார். அது உண்மைதான். இந்த உலகத்தில் உயிருடன் வாழ்வோரையெல்லாம் உயிர் வாழ்வோர் என்று ஒத்துக்கொள்ளமுடிவதில்லை. வள்ளுவரே இதை ஒத்துக்கொள்ளவில்லை. "வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார் இசை ஒழிய வாழ்வாரே வாழாதவர்'' என்கிறார் அவர். பழி உண்டாகாமல் வாழ வேணடும் அதுதான் வாழ்க்கை.

அடுத்தவர்களுக்கு உதவி செய்து அதனால் வரும் புகழுடன் வாழவேண்டும். அடுத்தவர்களுக்கு கெடுதல் செய்து பழியோடு வாழ்வோரை வாழ்வோராக ஏற்கமுடியாது. கெட்ட எண்ணங்கள் இல்லாமல் போக வேண்டும். அப்போதுதான் தெளிவும் ஞானமும் வரும்.

ஒரு குரு இருந்தார். அவரைப் பார்த்து ஆசீர்வாதம் பெறலாம் என்று ஓரு சீடன் போனான். போய்க் கொண்டிருக்கும் போது.... வழியில் ஒரு யோகி "எங்கே போகிறாய்?"என்று கேட்டார். இவர் விபரத்தைக் கூறினார். அந்தக் குருவின் மீது இந்த யோகிக்கு ஏற்கனவே பொறாமை. அதனால் அந்த சீடரைப் பார்த்து "உனது குருவுக்கு எதுவுமே தெரியாது. அவர் ஒரு முட்டாள். நீ அவரை விடப் பெரிய முட்டாள்.அதனால் தான் அவரது சீடன் ஆனாய். உனது குருவால் ஏதாவது அற்புதம் செய்துகாட்ட முடியுமா? என்னை மாதிரி அவரால் நீர் மீது நடக்க முடியுமா? ஆகாயத்தில் பறக்க முடியுமா? இல்லை. பூமியில் புதைந்து கிடக்க முடியுமா? அவரால் எதுவும் முடியாது? அப்படிப்பட்ட குருவிடம் போய் ஏன் நேரத்தை வீணாக்குகிறாய்?" என்றாராம்.

இதற்கு அந்த சீடன் "நான் ஏன் அவரைக் குருவாக ஏற்றுக்கொண்டு வணங்குகிறேன் என்றால் அவர் ஒருபோதும் கோபப்படமாட்டார். மற்றவரைக் குறை கூறமாட்டார். இதைத்தான் அற்புதங்கள் யாவற்றிலும் பெரியதாக நான் எண்ணுகிறேன்" என்றாராம். இதைக் கேட்டதும் அந்த யோகி தலை குனிந்து போனாராம்.

குளத்தில் மேலே நடக்கும் அதிசயத்தைவிட கோபப்படாமல் நடக்கும் அதிசயம் தான் பெரியது. அப்படி நடக்கப் பழக்கப்படுத்திக் கொள்வதுதான் மனிதனுக்கு நல்லது. கவலை எப்படி வருகின்றது என்பதற்கு ஒருவர் காரணம் சொன்னார். முதலில் கோபம் வருமாம். அதைக் காட்டுவதற்கு எதிரில் யாரும் இல்லாவிட்டால் அந்தக் கோபம் தன் மீதே திரும்புமாம். அந்த சூழலில் அதைக் கவலை என்கிறோம். கவலை வருவதற்கு இப்படியும் ஒரு வழி. மனதில் சாந்தியில்லாமல் வாழ்ந்தால் அது என்ன வாழ்க்கை?

சர்வாதிகாரி ஒருவன் மரணப் படுக்கையில் கிடந்தான். வைத்தியர்கள் கைவிட்டுவிட்டனர். அவருக்கு வைத்தியம் செய்த பெரியவர் ஒருவர் வந்தார். "இறந்து கொண்டிருப்பவன் மனச் சாந்தியுடனாவது போய்ச் சேரட்டும்" என்று நினைத்தார். "மேன்மை தாங்கிய அதிபரே! தங்கள் எதிரிகளை மன்னித்து விடுகிறீர்களா?" என்று கேட்டார். சர்வாதிகாரி சாவகாசமாகப் பதில் சொன்னாராம் "ஐயா! நான் மன்னிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். ஆனால் இப்போது எனக்கு விரோதிகள் யாருமில்லை. ஏனென்றால் நான் அவர்களை ஏற்கனவே கொன்றுவிட்டேன்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தமிழ் மாணவர்களின் நலனில் அரசு அக்கறை காட்டுவதில்லை

## கஜேந்திரன் எம்.பி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

தமிழ் பல்கலைக்கழக மாணவர்களின் நலனில் அரசு அக்கறையின்றி செயற்பட்டு வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக ஊடகம் ஒன்றுக்கு அவர் கருத்து தெரிவிக்கையில்,

சமீபத்தில் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் 9 தமிழ் மாணவர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட கணனிகளை இதுவரை கையளிக்க பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், அவர்கள் தனியார் விடுதிகளில் தங்கியிருந்ததை காரணம் காட்டி இந்த விடயத்தை பல்கலைக்கழகம் தட்டிக் கழிக்க முயற்சிக்கிறது என்றும் தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்தில் விடுதி வசதிகள் இல்லாத காரணத்தினாலேயே அந்த மாணவர்கள் தனியார் விடுதிகளில் தங்கவேண்டிய நிலை ஏற்படட்டது என்றும் சுட்டிக் காட்டியுள்ளார். இவ்வாறு பல்கலைக்கழக மாணவர்களுக்கே பாதுகாப்பு வழங்க முடியாத அரசு சாதாரண பொது மக்களுக்கு எவ்வாறு பாதுகாப்பு வழங்கும்? என்றும் அவர் கேள்வி எழுப்பினார். தற்போது கொழும்பில் வீதிச் சோதனைகள் அதிகரித்துக் காணப்படுகின்ற சூழலில் தமிழ்மக்கள்படையினரால் பாதுகாப்பு என்ற போர்வையில் அவமானப் படுத்தப்படுகின்றார்கள்.

நாளாந்தம் தமிழ் மக்கள் கைது செய்யப்படுகின்றார்கள் .துருவித்துருவி விசாரணைக்குட்படுத்தப்படுகின்றார்கள். கொழும்பு நிலைமைகள் என்பது தமிழ்மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லாத இடமாக மாறி விடுகிறது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மேலும் தெரிவித்தார். (க)

# சமுர்த்தி பயனாளிகளுக்கான சமூகப் பாதுகாப்பு நன்மைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சமுர்த்தித் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்படும் சமுர்த்தி முத்திரை பெறும் பயனாளிகளுக்கு 01.07.2006 ஆம் திகதியிலிருந்து பின்வரும் நன்மைகள் பிரதேச செயலகப் பிரிவினூடாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பின்வரும் நன்மைகளை உரிய சமுர்த்திப் பயனாளிகள் தங்களின் கிராமத்தி லுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடா கப் பிரதேச செயலகத்தில் உடனடியாக இந்த நன்மைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

*மகப்பேறு உரித்து -நன்மை பெறுவோர்*

சமுர்த்தி பயநுகரியின் மனைவிக்கு கிடைக்கும் குழந்தைக்கு மாத்திரமே மகப்பேற்று உரித்து. பயநுகரி பெண்ணானால் அவருக்கும் உரித்து.கொடுப்பனவு -முதலாவது மகப்பேற்றுக்கு 5000/-, இர்ண்டாவது மகப்பேற்றுக்கு 2500/- வரையறை -முழு வாழ்க்கைக் காலத்தில் இரண்டு மகப்பேற்றுக்கு மட்டும் இந்த உரித்து உண்டு. இரட்டை குழந்தைகளானால் அதில் ஒரு குழந்தைக்கு மட்டும் உரித்து. இதில் முதலாவது மகப்பேற்று நன்மையினை பெறாத ஒருவர் இரண்டாவது மகப்பேற்று நன்மையாக 2500/- வினை மட்டும் பெறுவர். பிறப்புச் சான்றிதழ்அத்தாட்சிப் பத்திரம் /சத்துணவுப்படிவும் ஆகிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

*திருமணம் -நன்மை பெறுவேர்*

இரண்டு சமுர்த்திப் பயநுகரிகள் குடும்பத்திற்கிடையில் திருமணம் நடைபெற்றால் இரு குடும்பத்திற்கும் உரித்துண்டு. பயநுகரி /பயநுகரியின் பிள்ளையின் திருமணத்திற்கு உரித்து. எதுவித உரித்தும் பெறாத ஒருவர் (கணவர்/ மனைவி) இறந்த பின்னர் சட்ட ரீதியாக இரண்டாவது திருமணம் மேற்கொண்டால் அதற்குரித்துண்டு. விவாகரத்து செய்த ஒருவர் மீண்டும் திருமணம் மேற்கொண்டால் உரித்துண்டு. ஆனால் ஏற்கனவே உரித்துப் பெறாத வராக இருத்தல் வேண்டும்.

*கொடுப்பனவு*

பயநுகரி திருமணமாயின் 3000/- , வேறு ஒருவரின் திருமணமாயின் 1000/- வரையறை- இக்கொடுப்பனவு முழு வாழ்க்கைக் காலத்தில் இரண்டு திருமண நிகழ்வுகளுக்கு மட்டும் வழங்கப்படும் . ஒரு கொடுப்பனவு பெற்று அதிலிருந்து 12 மாதங்கள் பூர்த்தியான பின்னரே இரண்டாவது கொடுப்பனவு பெற்றுக்கொள்ளலாம். கணவன், மனைவி நீண்டகாலம் வாழ்ந்த பின்னர் சட்டரீதியான தேவை கருதி திருமணம் முடிந்தால் உரித்து இல்லை .

திருமணப் பதிவுச் சான்றிதழ், பயநுகரியுடனான உறவை அத்தாட்சிப்படுத்தும் ஆவணம் ஆகியன சமர்ப்பிக்கப்படவேண்டும்.

*வைத்தியசாலை கட்டண- நன்மை பெறுவோர்*

பயநுகரி, பயநுகரி அங்கத்தவர் அவரது கணவர் அல்லது மனைவி வரையறை- அரசினர் வைத்தியசாலையில் அல்லது ஆயுள் வேத வைத்தியசாலையில் 7 அல்லது 7ற்கு மேற்பட்ட தினங்கள் இருத்தல் வேண்டும். இதன் போது அனுமதிக்கப்பட்ட தினமும், வெளியேறிய தினமும் உள் ளடக்கப்படும்.

கொடுப்பனவுகள் -தினத்திற்கு 50 ரூபா வீதம் ஒரு வருடத்தில் 30 நாட்களுக்கு 1500/- மாத்திரம் வழங்கப்படும். சிகிச்சை அட்டை/வைத்தியரின் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படவேண்டும். பெற்றுக்கொள்ளும் நடைமுறை பயநுகரி ஒருவர் வைத்தியசாலையில் இருந்து வெளியேறி 7 தினங்களுக்குள் படிவங்களை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். பயநுகரி ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சையின் போது இறந்தால் மரணத்துக்கான கொடுப்பனவு மட்டும் வழங்கப் படும்.

*மரண உரித்து நன்மை பெறுவோர்*

சமுர்த்தி பயநுகரி சமுர்த்திப் பயநுகரியின் வாழ்க்கைத் துணை அவரது குடும்பத்தில் திருமணமாகாத பிள்ளைகள் பயநுகரியின் தாய் அல்லது தந்தை மரணமாகி இறுதிக் கிரியைகள் பயநுகரியின் வீட்டில் நடைபெற்றால் கொடுப்பனவு 10000/- வரையறை-தற்கொலையென்றால் உரித்து இல்லை. குழந்தையின் மரணமாயின் பிறந்து 6 மாதங்களுக்கு மேல் உயிர்வாழ்ந்திருத்தல் வேண்டும். பயநுரி கிளர்ச்சி, கலவரம் என்பவற்றால் இறந்திருந்தால் நீதிமன்ற தீர்ப்பின் படி நிரபராதி என தீர்ப்பளிக்கப்படும் பட்சத்தில் உரித்துண்டு. மரண இறுதிக்கிரியைகள் நடைபெறுவதற்கு முன்னர் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும். மரணப்பதிவுச் சான்றிதழ், மரணம் நிகழ்ந்ததாக உறுதி செய்து கொடுக்கும் சான்றிதழ் ஆகிய ஆவணங்கள் சமர்பிக்கப்பட வேண் டும். (து)

# புலனாய்வு அமைப்புக்களை ஒருங்கிணைக்க வேண்டும்

## எல்லாவெல மேதானந்த தேரர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளைப் போல அனைத்து புலனாய்வு அமைப்புகளைபும் ஒருங்கிணைக்க வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லா வெல மேதானந்த தேரர் வலியுறுத்தியுள்ளார்.



நாடாளுமன்றத்தில் அவசர காலச் சட்ட நீட்டிப்பின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு மேலும் கூறுகையில்,

புலனாய்வு அமைப்புக்கள் தனித்தனியே இயங்கி வருவது தான் நமது பலவீனம். விடுதலைப் புலிகளைப் பொறுத் தவரை புலனாய்வு அமைப்பானது ஒரே பிரிவாக பொட்டு அம்மா னின் கீழ் செயற்படுகிறது. அதைப் போல் அரசாங் கத்தின் புலனாய்வுப் பிரிவுகளும் ஒருங்கிணைக் கப்பட வேண்டும். தற்போதைய அவசர காலச் சட்டத்தில் பல குறைபாடு கள் உள்ளன. மன்னர்கள் ஆட்சிக்காலத்தில் இத்தகைய சட்டங்களில் ஓட்டைகள் இருந்ததில்லை.

இலங்கையில் தமிழர்களுக்குத் தாயகம் இல்லை. அது தொடர்பான விவாதத்துக்கு நான் தயாராக இருக்கிறேன். தமிழர் தாயகம் என்பதை வரலாற்று ரீதியாக நிரூபிக்க முடியாது. அப்படியான ஒரு தமிழர் தாயகத்துக்கு அப்பால் தான் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். தமிழர் தாயகம் எனப்படும் பகுதியில் முஸ்லிம்களும் சிங்களவர்களும் வசிக்கின்றனர் என்றார். (கு)

# அரசியல் அமைப்புச் சபையை விரைவில் செயற்படுத்துக!

## ஐ.தே.க. அரசிடம் கோரிக்கை

அரசியலமைப்புச் சபையை விரைவில் செயற்படுத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

அரசியலமைப்புச் சபையை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டால் அரசியலமைப்பின் 18 ஆவது திருத்த யோசனைக்கு உதவி வழங்க ஐக்கிய தேசியக்கட்சி தயாராகவுள்ளது என்று எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்த அறிக்கையில் அரசியலமைப்பு சபையின் 18ஆவது திருத்தத்தில் புதிய மாற்றங்களைச் செய்ய ஐக்கிய தேசியக்கட்சி தனது ஆதரவை வழங்க தீர்மானித்துள்ளது. எனினும் ஜனாதிபதி அரசியலமைப்புச் சபையை செயற்படுத்தாமல் நியமனங்களை மேற்கொள்வது தவறானது என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-9)



# யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கு நல்லூர்
# அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயில்
# இரதோற்சவ சிறப்பு மலர் - 09.07.2006





## மஹோற்சவ பிரதம குருவின் ஆசிச்செய்தி

அகிலபுவனமாதாவாகிய அன்னை வீரமாகாளி என்ற வீரத் திருநாமத்துடன் அருள் ஆட்சி செய்ய வண்ணை நல்லூர் வாழ் மக்கள் எல்லோரும் மெய்நெறியோடு ஆலயம்வந்து மஹோற்சவ காலத்தில் அன்னையை வழிபட்டு தாம் தாம் விரும்பிய சித்திகளெல்லாம் பெற்ற வண்ணம் உள்ளர். காளியம்மாவின் கடைக் கண் பார்வையையும் அருட்காட்சிகளையும் கண்குளிர கண்டுகளித்த அன்பர்கள் பலர் உள்ளனர். அப்படி திருவருள் நிறைந்து விளங்கும் அன்னைக்கு இன்று தேர்த் திருவிழா. அன்னை தேரேறி வீதிவலம் வரும்வேளை அடியவர்களின் பழவினைகள் யாவும் வேரோடு நீங்கிவிடும் என்பதில் ஐயமில்லை.

தேரேறி வரும் அன்னையைத் தரிசித்து எம் எல்லோரின் பழவினைகள் யாவும் நீங்கி மண்ணில் நல்ல வண்ணம் வாழ தாயாரை உள்ளன்போடு பிரார்த்திக்கின்றேன். இந்த நாட்டில் வாழ்கின்ற அனைவரும் ஒற்றுமையாக, அமைதியாக சுய மரியாதையுடன் வாழ எல்லாம் வல்ல அகில புவனமாதாவாகிய வீரமாகாளி அம்பாள் திருவருள் வேண்டிப் பிரார்த்தித்து நல்லாசிகள் கூறுகின்றேன்.

சுபம்

*மகோற்சவ பிரதமகுரு*
*ஆகமகிரியா ஜோதி சிவஸ்ரீ மகாலிங்கசிவக்குருக்கள்*
*ஜே.பி., பிரதமகுரு*
*அரசடிப்பிள்ளையார் ஆலயம், நாயன்மார்கட்டு,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

## வாழி

சைவகுருப் பரம்பரையோர் நீடு வாழி
சக்தியவள் பக்தர்களும் தொச். டர் வாழி
துய்யதமிழ் மன்னன்சங் கிலியன் வாழி
தூயராஜ தானிநகர் நல்லூர் வாழி
தையலரின் கற்புநெறி ஞானம் வாழி
தரணி தனில் யாழ்ப்பாணப் பதியும் வாழி
வையகத்தில் ஆதி சைவ வம்ஸம் வாழி
வீரமா காளியம்மை வாழி! வாழி!!



## ஆலய பிரதம குருவின் ஆசியுரை



அண்டங்கள் அனைத்தையும் அரசாட்சி செய்கின்ற அன்னை வீரமாகாளி வண்ணை மாநகரில் நல்லையம்பதியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருந்து வேண்டுவார்க்கு வேண்டுவனவற்றை அருள்பாலிக்கின்ற கலியுக தேவியாம் காளி அம்மாள் இன்று தேரேறி வீதி வலம் வரும் வேளை அம்பாளின் கடைக்கண் பார்வை பட்டாலே போதும் அடியவர்களின் துன்பங்கள் எல்லாம் நீங்கிவிடும் என்பதில் ஐயமில்லை.

தேரேறி வரும் அன்னையை தரிசித்து அம்பாளின் அடியவர் களின் முன்வினைகள் நீங்கி இம்மண்ணில் இன்புற்று வாழ அன்னை வீரமாகாளியை உள்ளன்போடு பிரார்த்திக்கிறேன். தேரேறும் அகில புவன மாதாவே தேரில் வீதி வலம் வரும் வேளை உன் கடைக்கண் பார்வையால் தங்களின் ஆலயத்தை சிருஷ்டிக்க வேண்டுகிறேன். எதிர்வரும் ஆண்டு தாயார் தேரேறும் வேளை இவ்வாலய திருப்பணி வேலைகள் முற்றுப் பெற எல்லாம் வல்ல வீரமாகாளி அம்பாளை பிரார்த்திக்கின்றேன்.

இவ்வுலகத்தில் வாழுகின்ற அனைவரும் ஒற்றுமையாக வாழவும் நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவ எல்லாம் வல்ல வீரமாகாளி அம்பாளை பிரார்த்தித்து அருள்ஆசி கூறுகின்றேன்.

சுபம்

*சிவச்சார்ய இளவரசு*
*சிவஸ்ரீ சிவ கமல்ராஜ் குருக்கள்*
*(பிரதம குருவும் தர்மகர்த்தாவும்)*




# கிருஷ்ணா நகை மாளிகை

இல.09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 222 5046

09, Kannathiddy Road,
Jaffna.

## சந்நதி முருகன் வேக் சொப் அன் சேவிஸ்

டேவிட் பீரிஸ் மோட்டார் கொம்பனி லிமிட்டெட்டின் 'அதிகாரம் பெற்ற சேவை முகவர்', மோட்டார் சைக்கிள் ஸ்பெயார் பாட்ஸ், ரான்ஸ்போட் அன் ரவல்ஸ்

தொ.பே.இல:021 222 8076
0777 110199
021 222 5202

241, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## யோகி ஹோம் சயன்ஸ் அக்கடமி

YOGI HOME SCIENCE ACADEMY

அழகுக் கலை பயிற்சியகம்
75, அம்மன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

## வெங்கடேஸ்வரா

உலகப் பிரசித்திபெற்ற இங்கிலாந்து தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்ட 12 வருட உத்தரவாதம் கொண்ட RALEIGH சைக்கிள் யாழ்.ஏகவிநியோகஸ்தர்கள் ஆண், பெண் இருபாலாருக்கும் உண்டு.

*துவிச்சக்கர வண்டிகள் அவற்றுக்கான உதிரிப்பாகங்கள் அனைத்தையும் பெற்றிட நாடுங்கள்*

இல. 125A, 127, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## அம்பாள் மரக்காலை

Ambal Timber Depot

No:261, Pointpedro Road,
Nallur.

261, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

Reg.No: NAL/58

சைக்கிள், சைக்கிள் உதிரிப்பாகங்கள் மற்றும் கண்ணைக் கவரும் சிறுவர்களுக்கான சைக்கிள்கள் அனைத்தையும் உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய நாடவேண்டிய இடம்

## ஈஸ்வரன் ரேடர்ஸ்

69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P:021 2813

## தமிழன் Thamilan

பாரம்பரிய தமிழர் உணவகம்
AUTHENTIC THAMILAR CUISINE

*காலை- மதிய- இரவு உணவுகள் *அறைகள்
*வைபவங்கள்/ சுவட்டங்களுக்கு பொதுக்கூடம்
*AC,TV, தொலைபேசி, சுடுநீர் வசதியுடன் உல்லாசப் பிரயாணிகள் சபையின் அங்கீகாரம் பெற்ற

YARL PAADY RESIDENCY
51C, AMMAN ROAD, NALLUR, JAFFNA.
021 222 6868 / 0777 276636
BOOKINGS: 372, GALLE ROAD, COL.03
0777 360353, 4736086 / 87



# நயினை நாகபூஷணி அம்மன் தேர்ச் சிறப்பிதழ் - 2006




## எரிக்கணேஷ்

- இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து நவீன ரகக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
- இழந்த பற்களுக்கு நிகராக சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும்.
- உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக்கொள்ளவும்.
- வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன முறையிலான கேஸ் வகைகளைப் பெற்றுக்கொள்ளவும்
- விரும்பிய நிறங்களில் பிளாஸ்ரிக் லென்ஸ் போட்டோ கிறேலென்ஸ் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளவும் நாடுங்கள்.

(கட்டுப் பற்களைச் சுத்தம் செய்யும் மாத்திரை விற்பனைக்குண்டு)

கிளை இல: 91 கே.கே.எஸ் வீதி.

கிளை இல: 80, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.



மூக்குக் கண்ணாடியகமும் பல் கட்டுமிடமும்

566, 564 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 222 2486

அனைவருக்கும் நாகபூஷணி அம்பாளின் அருள் கிடைக்க வேண்டுகின்றோம்!

பாலர் வகுப்பு முதல் பட்டதாரி வகுப்பு வரையிலான சகல பாடப்புத்தகங்களும், அப்பியாசப் புத்தகங்களும் மற்றும் பாடசாலை உபகரணங்களும் மலிவான விலையில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நகரின் மத்தியில் நாடவேண்டிய நல்லதோர் நூலகம்

❖ தென்னிந்தியச் சஞ்சிகைகள், வாழ்த்துமடல்கள், காலத்திற்கேற்ப கலண்டர்கள், டயறிகள் யாவற்றினதும் உறைவிடமும் இதுவே.

❖ யாழ்ப்பாணம் - கொழும்பு புதினப் பத்திரிகைகள் அனைத்தினதும் பிரதான முகவர்களும் இவர்களே!

## பூபாலசிங்கம் புத்தகசாலை



இல.04 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 222 6693

தேரேறி வரும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் அருட்கடாட்சம் அனைவருக்கும் கிடைக்கட்டும்!

அசல் தங்க நகைகளுக்கு நம்பிக்கையாக நாடுமிடம்

## சிறி மீனாட்சி தங்க மாளிகை



187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 222 6109

நாகபூஷணி அம்பாளின் திருவருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டுகின்றோம்!

பலசரக்குப் பொருட்கள், மிக்ஷர் தயாரிப்பிற்கான பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்

## ஜெகன் களஞ்சியம்

இல.285, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

T.P: 021 222 5035

அனைவருக்கும் நயினை நாகபூஷணி அம்பாளின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்!

சகல விதமான பலசரக்குப் பொருட்களையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள



## றூபா பன்முக வர்த்தகம்

தொலைபேசி இல: 2479

இல.104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## தயா அச்சகம்

*ஓவ் (f) செற் பிறின்ட் றோணியோ *கணனிமூலம் தமிழ், ஆங்கில தட்டச்சு மற்றும் சகலவிதமான அச்சுவேலைகளும் வேண்டிய வண்ணத்தில் சிறந்த முறையில் குறித்த தவணையில் குறைந்த செலவில் உங்கள் விருப்பத்திற்கேற்ற வகையில் செய்துகொள்ள

தயா அச்சகம்

138. நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (நாவலர் பாடசாலை முன்பாக)

T.P: 021 222 2881

நயினை அம்பாளின் அருள் அனைவருக்கும் கிடைப்பதாக!

அனைத்து வகைப் புடவைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள கைராசியான ஸ்தாபனம்

## சீமாட்டி புடவைக்கடல்



கிளைகள்:

மங்கை சில்க்ஸ்

மொடேர்ன் மாக்கற்

சர்வதேச கடன் அட்டைகள் ஏற்கப்படும்

(இல.15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்).

(இல.122 மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்)

T.P: 222 2196 Fax: 222 2102

அனைவருக்கும் நயினை நாகபூஷணி அம்பாளின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்!

நவநாகரிகமான சுபமுகூர்த்தப் பட்டுப் புடவைகளுக்கும் உங்கள் சகலவிதமான ஆடைத் தெரிவுகளுக்கும் நாடும் நல்லதோர் ஸ்தாபனம்



## ராசி சில்க்ஸ்

70, 71A, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்

## நல்லி சில்க்ஸ்

121/1. மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

T.P: 021 222 5571

இன்று தேர் உலா வரும் நயினை நாகபூஷணி அம்பாளின் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்!

நாளுக்கு நாள் மாறும் நாகரிகத்திற்கேற்ற டிசைன்களில் ஆடைகளைத் தெரிவு செய்வதற்கு ஏற்ற இடம்



## த.சங்கரப்பிள்ளையும் மைந்தர்களும்

நவீன சந்தை (வெளிப்புறம்) பெரியகடை, யாழ்ப்பாணம்.



# நயினை நாகபூஷணி அம்மன் தேர்ச் சிறப்பிதழ் - 2006




சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமான நல்லெண்ணெய்
V.S.P தயாரிப்பாளர்:-
பரிமளா ஸ்ரோர்ஸ்
இல.26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P:- 222-2785



நவீன வடிவமைப்புக்களின் அழகிய தங்க நகைகளை செய்து பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்
பிறேம் நகை மாடம்
PREM NAGAI MADAM
Articles are all Guaranteed & Genuine for Quality Jewels
Yarl Road, Manipay
யாழ். வீதி, மானிப்பாய். T.P:- 0777 - 060327

எ.சி. எல்.வயர், சொங்கி சுவிச், ரியூப் பிற்றிங் மற்றும் மின்சார பொருட்கள், எஸ்லோன் பைப் வகைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
நியூரோன் எலெக்ரிக்கல்
இல 440, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சிறி நதியா நகை மாளிகை
இல.01.கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: சுஜனுயா, சிதிருபா நகைமாளிகை
இல 56. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம



அசல் 22 கரட் தங்க நகைகளை எழில் மிகு வடிவில் செய்து பெற்றிட நாட வேண்டிய இடம்
நியூ கார்த்திகா நகைமாடம்



சிறி கார்த்திகா நகைத் தொழிலகம்
நியூ கார்த்திகா நகைமாடம்
இல 06, மகாராஜா கட்டடம் சுன்னாகம் சந்தி, சுன்னாகம்.
T.P: 0777 290816



சிறி கார்த்திகா நகைத் தொழிலகம்
இல 212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0777 148047

சிறந்த முறையில் நெல் உடைத்து தீட்டியும், மிளகாய், அரிசி, குரக்கன், ஒடியல், ஈர அரிசி அரைத்தும், வடை, இட்டலிக்கு ஈர உழுந்து அரைத்தும், சீயாக்காய், கோப்பி என்பன அரைத்தும் கொடுக்கப்படும்.
சரஸ்வதி அரிசி ஆலை
உள்ளூர், வெளியூர் தொலைத்தொடர்பு சேவை, போட்டோப்பிரதி, தொலைநகல் (Fax) வசதியும் குறைந்த செலவில் செய்து கொடுக்கப்படும்
சரஸ்வதி தொலைத் தொடர்பகம்
ஆடியபாதம் வீதி (பழைய ஸ்ரேசன்றோட்)
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். உள்ளூர் - T.P: 021 222 3105
வெளியூர் T.P: 0094 -021 222 3105



100 கிராம் ஜீவாகாரத்தில் 16.5 கி. புரதமும், 400 கி. கலோரி சக்தியும் உள்ளது
ஜீவாகாரம்
நாளெல்லாம் புத்துணர்ச்சியுடன் இருக்க அருந்துங்கள்,
அண்ணா கோப்பி



போஷாக்குக் குறைவு, வளரும் குழந்தைகளுக்கும், கர்ப்பிணித் தாய்மாருக்கும் சிறந்த போஷாக்கு மிக்க உணவு ஜீவாகாரம்
உங்கள் சமையலை இலகுவாக்கி விரைவாக உணவு தயாரிக்க அண்ணாவின் தயாரிப்புக்கள்
- தோசைமா
- உழுந்துமா
- வறுத்த உழுந்துமா
- சிவப்பு அரிசிமா
- வெள்ளை அரிசி மா
- ஆட்டாமா
- குரக்கன் மா
- கடலை மா
- கறி மிளகாய்த்தூள்
- தனிமிளகாய்த்தூள்
- சரக்குத்தூள்
- துண்டுமிளகாய்
- மஞ்சள் தூள்
- மிளகுத்தூள்
- சீரகத்தூள்

உங்கள் ஆலயங்களிலும், இல்லங்களிலும் நறுமணம் கமழ அண்ணாவின் ஊதுபத்திகள், ரோஸ்பத்தி, மதுரங்கா பத்தி, சுகந்தவல்ல பத்தி, துர்க்கா பத்தி இவை அனைத்தையும் சுலபமாக பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.
உங்கள் பற்களின் வெண்மைக்கும், உறுதிக்கும், பற்களை பளபளக்க வைக்கவும் அண்ணா பற்பொடி
அகத்தின் அழகு முகத்திலல்ல உங்கள் கன்னத்தில் பார்க்க இன்றே வாங்குங்கள் புளூம் றெல்கம் பவுடர்
Manufactured & Marketed by;
ANNA INDUSTRY, INUVIL
T.P: 021 222 3565

# கர்மவீரர் காமராஜர்

## மீள்பார்வை

முருக-தனுஷ்கோடி

21



திருச்செங்கோடு தேர்தல் செல்லத்தக்கது. அல்ல என்ற ஒரு தீர்மானமும் கமிட்டிக்கு வந்தது. இது காரிய கமிட்டியின் தீர்மானம் ஆகும். இதற்கு ராஜாஜி கோஷ்டியினர் எதிர்ப்புத் தெரிவிக்க முயன்றனர். இந்திய காங்கிரஸ் தலைவர் மௌலானா ஆசாத் வெளியிட்ட அறிக்கையைச் சுட்டிக்காட்டி ராஜாஜி கோஷ்டியினர் தங்கள் கோஷ்டிக்குப் பலம் சேர்க்கப் பார்த்தனர். ஆகஸ்டு 12ஆம் திகதி தம்மைக் காங்கிரசில் சேர்த்துக்கொள்ளும்படி ராஜாஜி கடிதம் எழுதினார். என்றும் அதைத் தாம் ஒப்புக்கொண்டதா கவும் ஆசாத் அக்டோபர் முதல் திகதி அறிக்கை வெளியிட்டிருந்தார். இதை எடுத்துக் காட்டியே ராஜாஜி கோஷ்டி யினர் காரியக் கமிட்டித் தீர்மானத்தை எதிர்க்க முன்வந்தனர்.

ராஜாஜி கோஷ்டியினருக்கு உடனே பக்தவத்சலம் பதிலளித்தார். ராஜாஜி காங்கிரசில் சேர்ந்துவிட்டார் என்பதை ஒப்புக்கொண்டு அப்படியே வைத்துக் கொண் டாலும் சேர்ந்தாற்போல் மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாகக் காங்கிரசில் இருந்தவர்கள் தான் தேர்தலுக்கு நிற்க முடியும். விதி இதைச் சொல்கிறது என்று பக்தவத்சலம் பதிலளித்தார்.

தமிழ்நாட்டில் 37 இடங்கள் காலியாக இருக்க திருச்செங்கோடுக்கு மட்டும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவருக்குத் தெரியாமல் எப்படித் தேர்தல் நடத்த முடியும் என்று முத்துரங்க முதலியார் கேட்டார்.

திருச்செங்கோடு தேர்தல் செல்லாது என்று கடைசியில் காரிய கமிட்டி தீர்மானம் நிறைவேற்றியது. சட்டசபைத் தேர்தலுக்கு வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பார்லிமெண்டரி போர்டை நியமிக்கும் அதிகாரத்தைக் காரியக் கமிட்டிக்குக் கொடுத்தும் ஒரு தீர்மானம் நிறைவேறியது.

கல்கத்தாவில் கூடவி ருந்த அகில இந்தியக் காங்கிரஸ் காரிய கமிட்டிக்குத் தூது அனுப்புவது என்று ராஜாஜி கோஷ்டியினர் முடிவு செய்தனர். சீர்காழியில் அவர்கள் நடத்திய ரகசியக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானித்தனர். ராஜாஜியை எப்படியாவது முதல் மந்திரியாகக் கொண்டு வந்துவிட வேண்டும் என்று அவர்கள் வரிந்து கட்டிக்கொண்டு வேலை செய்தனர். அதன் விளைவே தூது செல்லும் திட்டமாகும். திட்டமிட்டபடி காரியக் கமிட்டியிடம் போய்த் தங்கள் அபிப்பிராயத்தைக் கூறினார்கள். தமிழ் நாட்டில் இரண்டு கோஷ்டிகள் காமராஜ் கோஷ்டி, ராஜாஜி கோஷ்டி என்று இருக்கிறது என்றனர். ஆகவே பார்லிமெண்டரி போர்டை அமைக்கும் பொறுப்பைத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிடம் விடக்கூடாது என்றும் அவர்கள் அங்கு கூறினார்கள்.

பார்லிமெண்டரி போர்டைத் தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி நியமித்தால் தேர்தலில் காங்கிரசுக்கு மெஜாரிட்டி கிடைக்காது என்றும் கூறிக்குறுக்கு வழியில் இலாபம் தேட ஆரம்பித்தனர்.

பார்லிமெண்டரி போர்டை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியே நியமிக்க வேண்டும் என்றும் அவர்கள் மேலும் யோசனை கூறினார்கள். அப்போது இந்தியக் காங்கிரஸ் தலைவரான மௌலானா ஆஸாத் காரியக் கமிட்டி உறுப்பினர் ஆஸப் அலியைத் தமிழ் நாட்டுக்கு அனுப்பினார். தமிழ் நாட்டின் நிலைமை குறித்து விசாரணை நடத்தவே அவர் சென்னைக்கு அனுப்பப்பட்டார்.

திருச்செங்கோடு தேர்தல் செல்லுமா செல்லாதா என்பது குறித்து தேர்தல் டிரிபுனல் தான் முடிவு செய்ய வேண்டும் என்றும் செல்லுமா செல்லாதா எனத் தீர்மானிக்கத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு அதிகாரம் இல்லை என்றும் ஆஸப் அலி கூறினார்.

தான் நடத்தாத ஒரு தேர்தலைப் பற்றித் தேர்தலை நடத்தவேண்டிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியே டிரிபுனலுக்கு அப்பீல் செய்யவேண்டிய நிலை வந்தது. காமராஜ் கலங்கவில்லை தேர்தல் டிரிபுனலைத் தாம் நியமிக்கப்போவதாக அறிவித்தார்.

## 13. சர்தாரின் சமரசம்

சென்னையை விட்டு ஆஸப் அலி பம்பாய் சென்றார். தமிழ் நாட்டு நிலைமையைச் சர்தார் படேலிடம் கூறினார்பிறகு டெல்லி திரும்பினார். அங்கிருந்து ஆஸப் அலி காமராஜுக்கு ஒரு தந்தி கொடுத்தார்.

விசாரணை அறிக்கையை இந்திய காங்கிரஸ் தலைவரிடம் கொடுக்கப் போவதாகவும் அதற்கு முன் ராஜாஜியுடன் பேசி சமரசத்துக்கு வர முடியுமா? என்றும் தந்தியில் ஆஸப் அலி குறிப் பிட்டிருந்தார்.

பம்பாயில் சர்தார் படேலைக் காமராஜின் பிரதிநிதி சந்தித்து நிலவரங்களை விளக்கினார். உடனே சர்தார் படேல் காமராஜுடனும் ராஜாஜியுடனும் தொடர்பு கொண்டார்.

காமராஜிடம் ராஜாஜி பேசினார் பார்லிமெண்டரி போர்டில் மொத்தம் 8 பேர் இருக்க வேண்டும் என்றும் அதில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் துணைத்தலைவர் தவிரப் பாக்கி ஆறுபேர்களில் மூன்று பேர் தமது கோஷ்டியினராகவும் மீதி மூன்று பேர் ராஜாஜி கோஷ்டியினராகவும் இருக்கலாம் என்று படேலிடம் காமராஜ் விளக்கினார்.

வேறு வழியின்றி இதற்கு ராஜாஜி ஒப்புக்கொண்டார் ஆரம்பம் முதலே காமராஜ் சொல்லி வந்ததும் இது தான் கல்கத்தா சென்று புகார் விசாரணை அது இது என நிலைமையை வளரவிட்டு இறுதியில் காமராஜ் சொன்னதையே ராஜாஜி ஏற்றுக் கொண் டார். இந்த முடிவைத் தலைமைப் பார்லிமெண்டரி போர்டு சார்பில் படேலும் ஏற்றுக் கொண்டார் ஆஸப் அலிக்குத் தகவல் கொடுத்தார். இந்தி ய காங்கிரஸ் தலைவருக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் வேலை ஆஸப் அலிக்கு இல்லாமல் போய்விட்டது.

எட்டுப் பேர் அடங்கிய தமிழ் நாடு காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு நியமனம் செய்யப்பட்டது. இதில் ராஜாஜிக்கு இடம்கொடுக்கவில்லை. காமராஜ், ருக்மணி லட்சுமிபதி, முத்துரங்க முதலியார், ராமசாமி ரெட்டியார், அவிநாசிலிங்கம் செட்டியார் ஆகிய ஐந்து பேர்கள் ஒரே கோஷ்டியாகவும் சி.பி சுப்பையா, முனுசாமிப்பிள்ளை, அண்ணாமலைப் பிள்ளை ஆகியவர்கள் ராஜாஜி கோஷ்டினராகவும் இதில் இடம் பெற்றனர்.

ராஜாஜி கோஷ்டியினர் தீர்மானம் வாபஸ் பெறப்பட்டது! தலைவர் காமராஜ் விருப்பப்படி பார்லிமெண்டரி போர்டைத் தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டியே நியமித்தது! அதிலும் தலைவர் நினைத்தபடியே நடந்தது! முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த இந்தச் சம்பவத்தை நினைக்கும் போது கவிஞர் கண்ணதாசனின் எழுத்து என் கண்முன் நிழலாடுகிறது. (தொடரும்)

---

### நந்தாவில் மனோன்மணி அம்பாள் தேர்த் திருவிழாச் சிறப்புக் கவிதை

#### நந்தாவில் மனோன்மணியே சமாதானம் தா!

நந்தா ஒளி விளக்கே நந்தாவில் குளத்தருகே
நமக்கு நீ எல்லாம் நீ நல்லகுல தெய்வமும் நீ
விந்தைமிகு கற்புலத்து வெற்றிக் கண்ணகியே
வையகதேவி நாயகியே நீ விழாவில் நீ மனோன்மணி
சிந்தையின் உள்சோதி நீ சங்கரியே சிவசக்தி
சிவனார் ஆதிகணபதி சிவசக்தி முருகனொடு
முந்தை நிலை வினையறவே முக்திநிலை நீ அருள்வாய்!
மேதினியில் சமாதானம் மலரவே நீ காப்பாயே!

*நல்லூர் சிவமுருகன் என்.தமிழ்மகன்*

---

### வண்ணை வீரமாகாளி அம்பாள் தேர்த்திருவிழாச் சிறப்புக் கவிதை

#### தேரேறி வருகிறாள் தேவி வீரமாகாளி!

பங்கயத்தாள் நோக பகலிரவாய் நின்று
பரவுவோர்க்கு நல்லருள் புரிவாய்!
மங்கையர் உனை வேண்ட பொங்கிடும் பொலிவுடன்
மனையறம் சிறந்திட அருள்வாய்!
சிங்கத்தின் மீதமர்ந்து தெருவலம் நீ வந்து
தீமைகள் அனைத்தையும் கொய்வாய்!
எங்களின் வீரமாகாளி அன்னையே! தாயே
எழிலுறு தேரினில் அருளிட வருவாய்!

அலைபாயும் கடல் போன்ற மனதினிலே
அமைதியினை தந்தருள வேண்டுமம்மா
கலையாவும் பயின்று கவிதைகள் செய்திட
கருணை வரமருள வேண்டுமம்மா!
நிலையாத வாழ்வினிலே நிலைக்கின்ற புகழ்பெறவே
நின்பாதம் நித்தம் பற்றினோமம்மா
மலைபோன்ற சோதனைகள் மறைந்திட
மகிடாசுர மர்த்தனியே தேரேறி வருக!

*மதுரகவி.காரை.எம்.பி. அருளானந்தன்*

---

## சிறையில் உள்ளோரின் குடும்ப நலன் பேணும் புதிய திட்டம்

(கொழும்பு)

போதைப் பொருள் பாவனை மற்றும் சிறு குற்றச் செயல்களுக்காக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் குடும்ப நலன்களை பேணும் நோக்கில் புதிய திட்ட மொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மஹிந்த சிந்தனையின் கீழ் சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அநாதரவான குடும்பங்களை மேம்படுத்தும் அமைச்சின் முதலாவது திட்டம் வெற்றி கரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவர்கள் சுய தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கான உதவிகளும் வழங்கப் பட்டுள்ளன.

குடும்பத் தலைவர்கள் குடும்ப அங்கத்தவர்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் பொருளாதார சமூக பிரச்சினை காரணமாக அவர்களது குடும்பம் வீதிக்கு இறங்குவதையும் தவறான வழிகளில் செல்வதைத் தடுக்கவுமே இப் புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

சிறைச்சாலை உதவி ஆணையாளர் அமைச்சுச் செயலாளரிடம் விடுத்தவேண்டுகோளையடுத்து இத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சின் சமூக அபிவிருத்தி குழுவினதும், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினதும் உதவி பெறப்பட்டுள்ளது.

சிறையில் தடுத்து வைக்கப் பட்டுள்ளவர்களை நேரில் சந்தித்து அதன் பின்னர் அவர்களது குடும்பத்தினரையும் சந்தித்து குடும்பத்தின் சமூக பொருளாதார பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

(கு-9)



நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் கலந்துகொண்ட நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம்(முதன்மை விருந்தினர்), முன்னாள் அதிபர் செல்வி யோ.செ.பஸ்தியாம்பிள்ளை (சிறப்பு விருந்தினர்), நல்லூர் முத்தமிழ் முன்பள்ளி அதிபர் செல்வி சி. சியாமளாதேவி, பாடசாலை அதிபர் க. வடிவேல் ஆகியோர் அணிவகுப்பு மரியாதையை ஏற்கிறார்கள்.

(படம்:-இருபாலை செய்தியாளர்)



# நயினை நாகபூஷணி அம்மன் தேர்ச் சிறப்பிதழ் - 2006




அனைவருக்கும் நயினை நாகபூஷணி அம்பாளின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்!



## COOL AIR'S

GALANZ AIR CONDITIONERS (SPILT TYPE)



*தொலைத் தொடர்பு நிலையங்கள்
*வர்த்தக நிலையங்கள்
*கணனி நிறுவனங்கள்
*காட்சி அறைகள்
*வீடுகள்

எமது சேவைகள்

❋பொருத்துதல் இலவசம்
❋மூன்று வருட உத்தரவாதம்
❋(Compressor 3 years, Body 1 year) விற்பனைக்கு பிந்திய சேவை மூன்று மாதத்திற்கு ஒருமுறை
❋H.F.C வாயு பயிற்சி பெற்ற (U.N.E.P), (N.O.U) United Nations Environment programme, National Ozone Unit
❋தொழில்நுட்பவியலாளர்களால் குளிரூட்டிகள் பரிசிலனை செய்யப்படும்.

ISO 9001 தரச் சான்றிதழ் பெறப்பட்டது

Galanz

இவைகளுக்கேற்ற குளிரூட்டிகள்

| வகை | விலை |
|---|---|
| 9000 BTU | 43,500/= |
| 12000 BTU | 53,300/= |
| 18000 BTU | 68,500/= |
| 24000 BTU | 88,500/= |

மேலதிக விபரங்களுக்கு: COOL AIR'S
இல. 151 1/4, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0777 738888 , 071 3080808

மேற்குறிப்பிட்ட விலை கையிருப்பு உள்ளவரை மட்டுமே



இன்று தேர் உலா வரும் நயினை அம்பாளின் அருள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டுகின்றோம்.



நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் தரம்மிக்க அசல் 22 கரட் தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள யாழ்.நகரில் சிறந்த ஸ்தாபனம்

## வினோ நகைப் பூங்கா

இல.185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
Phone/ Fax :- 021 222 2024



இதமான புகை இன்பத்திற்கு



அன்றும்! இன்றும்!! என்றும்!!!



## ஆர்.வி.ஜி.பீடிகள்

ஆர்.வி.ஜி.பீடி ஸ்தாபனம்
இல.58 நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 - 2226806

ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்து பால்மாவகைகள் என்பவற்றை நியாய விலையில் பெற்றுக்கொள்ள

R.V.G மெடிக்கல்ஸ்
இல. 504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 - 2222129



அனைவருக்கும் அம்பாளின் அருள் கடாட்சம் கிடைக்கட்டும்!

காஸ், காஸ்செற்களையும், மோட்டார்சைக்கிள்களையும், உதிரிப்பாகங்களையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்



## கரனி மோட்டோர்ஸ் அன் காட்வெயர்

HARANI MOTORS & HARDWARES

காஸ், காஸ் செற் விற்பனையாளர்
164, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2850
தொலைநகல்: 021 222 2850



## ASOKA JEWELLERS

No: 111, Kasthuriar Road, Jaffna.



அசோகா நகை அகம்

*Manufacturers of Gold Jewels*

இல. 111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



அனைவருக்கும் நயினை நாகபூஷணி அம்பாளின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்!



ஸ்ரீ அம்பிகை தொலைத் தொடர்பு நிலையம்

உள்ளூர்
0602212995
0602213429

சர்வதேசம்
0094602212995
0094602213429

நயினாதீவு

ஸ்ரீ அம்பிகை பல்பொருள் வாணிபம்
ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோவிலடி, நயினாதீவு- 1

ஸ்ரீ அம்பிகை பல்பொருள் வாணிபம்
நயினாதீவு- 3

விக்கினேஸ்வரா வெதுப்பகம்
நயினாதீவு-5



அகிலத்து நாயகியே எம் அல்லல் தீர்த்திட உன்னருள் நாடி நிற்கின்றோம் அன்னையே!

## அன்னபூரணி விலாஸ் சைவ உணவகம்



1ஆம் வட்டாரம், நயினாதீவு.
உரிமையாளர் : சோ.சிறீகரன்



# நயினை நாகபூஷணி அம்மன் தேர்ச் சிறப்பிதழ் - 2006





அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்!

புத்தம் புதிய துவிச்சக்கர வண்டிகள், T.V.,டெக் வகைகள், றேடியோ வகைகள்
அவற்றிற்கான உதிரிப்பாகங்கள், அன்ரனா வகைகள் போன்றவற்றை
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள



## இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்

இல: 50,52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:021- 222 2988, 3096 Fax: 021-222 2368

## E.S.PERAMPALAM AND CO

(PEPSI, MIRINDA, 7UP போன்றவற்றிற்கான ஏகவிநியோகஸ்தர்கள்)

---

அவனியெங்கும் அமைதி காத்திட ரதபவனி வரும் நயினை அன்னையே!
உன் அருள் அனைவர்க்கும் கிடைக்கட்டும்!

## யாழ்.ஏகவிநியோகஸ்தர்கள்





T.P : 222 2833, 222 7144

## கஜமுகன் ஹாட் வெயர்ஸ்

147,149 STANLEY ROAD, JAFFNA.

---

அகிலத்து நாயகியே! எம் அல்லல் தீர்த்திட உன் அருள் நாடி நிற்கின்றோம் அன்னையே!



## இதோ 171 ஸ்ரான்லி வீதியில்

உங்களது நன்மதிப்புப் பெற்ற றிறீடம் எல்.எம்.எல். ஸ்கூட்டர் மோட்டார் சைக்கிள், விவசாய உபகரணங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள புதிய நிறுவனம்

## S.P.N.MOTORS
## எஸ்.பீ.என். மோட்டர்ஸ்

171, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

---

அனைவருக்கும் நயினை அம்பாளின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்!

## ராம்கோ சீமெந்து
## RAMCO CEMENT



SLS - 107 அங்கீகாரம் பெற்றது
ISO - 9002 தரம் பெற்றது
BSS - 12-1991 தரத்திற்கு அமைவானது
100 வீதம் OPC சீமெந்து

ஆசியாவின் முதல்தர (No 1) தொழிற்சாலையாக தெரிவுசெய்யப்பட்ட தொழிற்சாலையில் இருந்து உற்பத்தி செய்யப்படுகின்றது என்பதனை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். குறைந்த விலையில் நிறைந்த பயனைப்பெற 100 வீதம் OPC சீமெந்தான ராம்கோ சீமெந்தினை உபயோகித்து முழுப்பயனைப் பெறுங்கள்!

## இறக்குமதியாளர்: ஈஸ்வரபகவான் அன் கம்பனி

91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P: 021- 222 2350

# அலைகடலின் மத்தியிலே அருள் சுரக்கும் அன்னை

அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகியாக விளங்குகின்ற அம்பிகை ஆதிபராசக்தியானவள் நயினையம்பதியிலே நாகபூஷ



ணியாக எழுந்தருளி வீற்றிருந்து அருளாட்சி புரிகின்றாள். இந்த அம்பிகையின் ஆலயம் நயினா தீவிலே நல்லதொரு சூழலிலே அழகுற அமைக்கப்பட்டிருக்கின்றது.

அலைகடலின் மத்தியிலே அருள் சுரக்கும் அன்னையாக அம்பிகை வீற்றிருக்கின்றாள். தம்மை வழிபடும் அடியார்களின் துன்பங்களையும் துயரங்களையும் இன்னல்களையும் இடுக்கண்களையும் போக்கியருள்கின்ற நாயகியாக, நாகேஸ்வரியாக நாகபூஷணியாக நயினையிலே நடுநாயகமாக இருந்து அருளை அள்ளிச் சொரிந்து கொண்டிருக்கிறாள்.

ஆடி ஆடி அசைந்து செல்லும் தோணியிலே பயணஞ்செய்து அம்பிகையை வழிபடுவதற்காக அடியார்கள் அலைமோதும் காட்சி உள்ளத்தைத் தொடும். எவ்வளவோ சிரமங்கள் இருந்தும் அத்தனையையும் பொருட்படுத்தாமல் அம்பிகையின் அருளுக்கும் பாத்திரமாகி விடும் எண்ணத்தில் அடியார்கள் இங்கு விரைகின்றனர்.

இன்று அம்பிகைக்கு அழகு ரதப்பவனி அலங்கார பூஜிதையாக ஸ்ரீ நாகபூஷணித் தாய் அழகிய சித்திரத் தேரினிலே ஆரோகணித்து வருகின்ற அழகுக்காட்சி காணக்கண் கோடி வேண்டும். நயினாதீவு அம்பிகையின் தேர்த்திருவிழா வெகு கோலாகலமாகவும் பக்தி பூர்வமாகவும் நடைபெறுகின்ற ஓர் இனிய விழாவாகும்.

அலை வீசும் கடலினிலே தோணியானது அசைந்து வருவது போல அடியார்கள் மத்தியிலே ''அரோஹரா! அம்பிகைக்கு அரோஹரா!'' என்ற கோஷம் வானைப் பிளக்க, அழகிய தேர் மணி ஓசையுடன் அசைந்து வரும் அழகே தனி.

''நயினை நாகேஸ் வரிக்கு அரோஹரா'' என்றபடி அடியார்கள் வடம் பிடித்து இழுத்து வர அழகிய சித்திரத்தேரானது அந்த ஆலய வீதியிலே அழகுப் பவனி வருங்காட்சி கண்கொள்ளாக் காட்சியன்றோ! விநாயகர், சுப்பிரமணியர் சமேதராக அம்பிகையானவள் அடியார்களுக்கு அருட்காட்சி தரும் இன்றைய நாள் ஒரு பொன்னான நாள். கம்பீரமாகத் தோற்றமளிக்கும் இராஜ கோபுரத்துடன் உள்ள இந்த ஆலயத்தில் வருடந் தோறும் நடைபெறுகின்ற மஹோற்சவத்திலே இன்றைய தேர்த்திருவிழா மிக மிக விஷேடமானது.

தமது நேர்த்திக்கடன்களையெல்லாம் பூர்த்திசெய்யும் நோக்குடன் ஆண்கள் அங்கப்பிரதட்சணமும், பெண்கள் (அடியழிப்பதும்) பஞ்சாங்க நமஸ்காரமும் செய்து அம்பாளின் திருவருளுக்குப் பாத்திரமாகி அகமிக மகிழ்ந்து முகமலர்ச்சியுடன் காணப்படுவர்.

நயினை ஸ்ரீ நாகபூஷணித் தாயின் கடைக்கண் பார்வை கிடைத்தால் போதும், நாம் கடைத்தேறி விடலாம் என்ற பரிபூரணமான நம்பிக்கையோடு கடல் கடந்து கைதொழும் அடியவர் கூட்டம் பக்திப் பரவசத்துடன் பாடிப்பணியும் திருத்தலம் நயினையே.

சரித்திரப் பிரசித்திபெற்ற இந்த ஆலயம் நோக்கி இலங்கையின் நாற்றிசையிலிருந்தும் அடியார் கூட்டம் வழிபாடு கருதிச் செல்வது தொன்று தொட்டு நிலவி வருகின்ற ஒரு வழக்கமாகும்.

இங்கு வரும் அடியார்களுக்கு அமுத சுரபியில் அன்னதானமும் வழங்கப்படுகிறது. பிறவிப் பிணி களைய வரும் அம்பிகை அடியார்களின் பசிப்பிணிகளையும் அரிய தொண்டு பாராட்டுக்குரியது.

''நயினை நாகபூஷணியே
நலந்தரும் தாயே!
நமக்கருள் புரிந்திடும்
நாகேஸ்வரி நீயே!
கயிலை மலையான் போல்
காட்சிதரும் தேவி
கைதொழுதோம் அம்மா
காத்தருள் புரிவாய்''

என்று உச்சரித்த வண்ணம் அம்பிகையின் அடியார்கள் திருவீதிவலம் வருவார்கள். இங்கு நடைபெறும் விழாக்கள் அத்தனையும் பக்திபூர்வமானவை.

ஆகவே இன்றைய நன்னாளிலே நயினைத் தாயின் நற்றாள் தொழுது அவளைச் சிந்தித்து நிந்து சேவித்து வந்தித்து வணங்கி வழிபட்டு முத்திப் பேரின்பம் பெற்றிட எல்லாம் வல் அம்பிகையின் அருளையே வேண்டி நிற்போமாக.

''அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெற லாமே''

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

## பரீட்சைப் பெறுபேறுகளை பார்வையிடலாம்

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் இறுதிப் பரீட்சைக்கு தோற்றிய பலாலி கலாசாலை ஆசிரிய மாணவர்களின் பரீட்சைப்பெறுபேறுகள் வெளிவந்து விட்டன என்றும் சம்பந்தப்பட்ட ஆசிரிய மாணவர்கள் பலாலி கலாசாலை அலுவலகத்தில் அவற்றைப் பார்வையிடலாம் எனவும் கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார். (சு-9)

## நிர்வாக சபைக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட. இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் மாதாந்த நிர்வாக சபைக் கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு தலைவர் சி.கதிர்காமத்தம்பி தலைமையில், சங்கப்பணிமனையில், இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (தி)

## அரசு மறுப்பு

(கொழும்பு)

பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதியின் சகோதரர் கோதபாய ராஜபக்ஷ நியமிக்கப்படுவார் என வெளிவந்த செய்திகளை அரசாங்கம் மறுத்துள்ளது.

ஊடகங்களின் இத்தகைய செய்திகள் அரசாங்கத்தை சங்கடமான நிலைக்கு தள்ளிவிடுமெனவும் அரச தரப்பு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## இராசி பலன்

**09.07.2006**
**(ஆனி 25, ஞாயிற்றுக்கிழமை)**
**திரியோதசி முற்பகல் 11.45 மணிவரை**
**கேட்டை பிற்பகல் 2.04 மணிவரை**
**இராகுகாலம் 4.28-5.58மணிவரை**
**சுபநேரம் 8.58-10.28 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | உத்தியோக பங்கம், எதிர்பாராத செலவு, சரீரப்பிரயாசை, மனப்பயம். |
| இடபம் | திருடர் பயம், மரியாதைக்குறைவு, காரிய தாமதம், பொருள்விரயம். |
| மிதுனம் | மனோதைரியம், தேகநலன், கீர்த்தி, காரிய அனுகூலம். |
| கடகம் | சுகவாழ்வு, சுபநிகழ்வு, எடுத்த காரியம் கைகூடும், போசனசுகம். |
| சிங்கம் | அஜீரண ரோகம், மரியாதைக்குறைவு, எடுத்தகாரியம் தாமதமாகும், பணவிரயம். |
| கன்னி | ரோகநிலை, சுபசெலவு, பொருள் விரயம், மனச்சஞ்சலம். |
| துலாம் | நற்கீர்த்தி, மனோதைரியம், வாகன சுகம், முயற்சி கைகூடும். |
| விருச்சிகம் | விவாதம், எடுத்த கருமங்கள் தாமதமாகும், குடும்பக்கவலை, கௌரவக்குறைவு. |
| தனுசு | சயனசுகம், மாதர்நட்பு, புதிய முயற்சி, நல்ல வரவேற்பு. |
| மகரம் | சோம்பல்நிலை, பிறருக்கு உதவுதல், காரிய தாமதம், பெரியோர் உதவி. |
| கும்பம் | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, மனமகிழ்ச்சி, முயற்சி கைகூடும். |
| மீனம் | நன்கொடை, பெரியோரால் மதிக்கப்படுதல், ஆரோக்கியம், அதிகாரம். |

- வளவன்

## மின்சாரம் தடைப்படும்

பராமரிப்பு வேலைகளுக்காக யாழ்.மாவட்டம் முழுவதும் சுழற்சி முறையில் மின்வெட்டு இடம் பெற்று வருகிறது. காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை இம் மின்தடை அமுலிலிருக்கும்.

இதன்படி எதிர்வரும் 15ஆம் திகதி உரும்பிராய், கோண்டாவில் பட்டணப்பகுதி மற்றும் யாழ்.மாநகர சபைப் பகுதி ஆகியவற்றிலும்22 ஆம் திகதி கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் 29 ஆம் திகதி இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணப் பட்டணம், ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், மருத்துவபீடம் பிரதேசம், பொற்பதி சங்குவேலிப் பகுதிகளிலும் மின் தடைப்படும். (க-7)

## உச்சக்கட்ட அதிகாரப் பரவலாக்கல் மாதுலுவாவே சோபித தேரர் வலியுறுத்தல்

நாட்டின் தேசிய பிரச்சினைக்குத் தீர்வுகாணுவதற்காக தென்னிலங்கை அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து உச்சக்கட்ட அதிகார பரவலாக்கல் யோசனை ஒன்றை தயாரிக்க வேண்டுமென்று கோட்டை சிறி நாகவிகாரை அதிபதி சங்கைக்குரிய மாதுலுவாவே சோபித தேரர் கூறியுள்ளார்.

உச்சக்கட்ட அதிகார பரவலாக்கலின் மூலம் இறுதித் தீர்வைத் தயாரித்து அதன் அடிப்படையில் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென சோபித தேரர் வலியுறுத்தியுள்ளார். நாட்டின் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டும் தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாணும் நோக்கு இணக்கப்பாட்டை கொண்டிருத்தல் அத்தியாவசியமாகும்.

அரசியல் இலாபம் பெறும் நோக்கில் தமது அரசியல் கோட்பாடுகளுக்கு இணங்க செயற்படுவதன் மூலம் நிரந்தர சமாதானத்தை எய்துவதற்கான தருணம் காலம் தாழ்த்தப்பட்டு செல்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கட்சி அரசியல் காரணமாக இலங்கையின் தேசிய பிரச்சினை சிக்கலான ஒன்றாக மாறியுள்ளதாக வணக்கத்திற்குரிய பிதா சிரில் காமினி தெரிவித்துள்ளார். சொத்துக்கள், உயிரிழப்புக்கள் வரை பிரச்சினை தீவிரம் அடைவதற்கு அரசியல்வாதிகள் பொறுப்புக்கூற வேண்டும். தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் சகல முயற்சிகளுக்கும் எதிர்க்கட்சி உள்ளிட்ட அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9)


குடியியல் நடைமுறைச் சட்டக் கோவையின் பிரிவு 55(1)ன் கீழ் நீதிமன்றினால் விடுக்கப்படும்

## அழைப்பு ஆணை

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

இராஜேந்திரன் பெண் அன்னலதா
கந்தசாமி மகள் அன்னலதா
பழம் வீதி
ஆனைக்கோட்டை

-வழக்காளி

வழக்கு இல: D/688
தன்மை - விவாகரத்து

எதிராக

பொன்னர் இராஜேந்திரன்
பழம் வீதி,
ஆனைக்கோட்டை
தற்போது ஜேர்மனி

- எதிராளி.

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு

இந் நீதிமன்றத்தில் உமக்கெதிராக மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி/பிராது அணைத்து அதில் விண்ணப்பித்துள்ள நிவாரணங்களைக் கோரி வழக்கு தொடர்ந்துள்ளாராகையால் குறித்த பிராதிற்கு உமது மறுமொழி ஏதும் இருப்பின் அதனை இந் நீதிமன்றத்தில் 2006ஆம் ஆண்டு 07 மாதம் 13 நாளன்று காலை 9.00 மணியளவில் அல்லது அதற்கு முன்னர் நீதிமன்றத்தில் கோப்பிடும் படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு குறித்த திகதியன்று அல்லது அதற்கு முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் இவ் வழக்கானது மறுகட்சிக்காரர் இல்லாமலே ஒரு முகமாக விளங்கி தீர்மானிக்கப்படுமென்றும் உமக்கு இத்தால் மேலும் அறிவிக்கப்படுகிறது.

பதிவுபெற்ற சட்டத்தரணி மூலம் நீர் மன்றில் தோன்றாவிடில் உமக்கு சட்டமுறையான சகல அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக் கூடிய முகவரியொன்றைக் கூறும் விபரக்குறிப்பொன்றை இந் நீதிமன்றில் கோப்பிடுமாறு இத்தால் நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்ற ஆணைப்படி
து.சிறீமோகன்
பதிவாளர்
யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்று

குறிப்பு:- விளக்கத் திகதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு கூப்பிடப்படும் திகதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெற விரும்பினால் பதிவுசெய்யப்பட்ட முகவரியொன்றை இந் நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுக்கும்படியும் பதிவஞ்சல் மூலம் உமக்கு அதனை அறிவிப்பதற்காக ஏற்படும் அஞ்சல் செலவுக்கான முத்திரைகளையும் கொடுக்குமாறும் இத்தால் குடி.ந.கோ.80 ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

திகதி 29.06.2006
வரைவு
வழக்காளிகளின் சட்டத்தரணி.

பதிவாளர்



# நயினை நாகபூஷணி அம்மன் தேர்ச் சிறப்பிதழ் - 2006



நயினை அம்மன் அருள் பெறுக

## கௌசி கபே



உரிமையாளர்:
பா.பேரின்பநாதன்
1ஆம் வட்டாரம் நயினாதீவு

## ஸ்ரீ நாக கமலம் படகுச் சேவை

---

நயினை நாகபூஷணி அம்பாளின் அருட்கடாட்சம்
அனைவருக்கும் கிடைக்க வேண்டுகின்றோம்!
குறித்த தவணையில் ஓடர் நகைகளை தரமான
22 கரட் தங்க நகைகளில் செய்து தர
யாழ்.நகரில் நம்பிக்கையான நகை மாடம்

## மைதிலி நகைமாடம்
## MAITHELY NAGAIMAADAM



89 V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 7902, 077 6092154

புத்தம் புது டிசைன்களில் குறித்த தவணையில் தரமாக செய்து தர

## YARL MAITHILYJEWELLERS
## யாழ்.மைதிலி ஜுவலர்ஸ்

157,Sea Street, Colombo-11
Tel:0112-396239
077 -6092154

---

எம்மையெல்லாம் காத்திடுவாய் தாயே!



## நாகராணி படகுச் சேவை
## ஞானவைரவர் படகுச் சேவை

6ஆம் வட்டாரம்
நயினாதீவு

உரிமையாளர் : ச.தருமராசா

---

அன்னையின் அருள் பெற அனைவரும் துதிப்போம்

உறுதியும் உத்தரவாதமும் உள்ள 22 கரட் தங்க,
வைர நகைகளைப் பெற்றுக்கொள்ள
நம்பிக்கையான ஸ்தாபனம்

## வி.எம்.கே. ஜுவல்லர்ஸ்




இல.105 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
கிளை ஸ்தாபனம்:
கண்டி வீதி, சாவகச்சேரி.

---

நயினை நாகபூஷணி அம்பாளின் அருட்கடாட்சம் அனைவருக்கும்
கிடைக்க வேண்டுகின்றோம்!
சகல விதமான கேக், ஐஸ்கிறீம், குளிர்பானங்களைத் தயாரிப்பதற்கான பொருட்கள்,
கைத்தொழில் மூலப்பொருட்கள், வாசனைத் திரவியங்கள் மற்றும்
ஆயுர்வேத மருந்துச் சரக்குகள், அரோவ்ட் மா ஆகிய அனைத்தையும் பெற்றிட

## ஸ்ரீகாந்த் எசன்ஸ் அன் குறோசறீஸ்



இல.151 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
No:161, K.K.S.Road, Jaffna.
T.P : 021 222 2219

---

Fedex Express® **திருமுருகன் கொம் நெற்** Western Union®

விரைவானது. பாதுகாப்பானது. நம்பகமானது.

Island & I.D.D Calls, Internet Browsing & E.mail ,Fax, Photo Copy, Computer Typing & Printing & Computer Hand Phone Accessories.



259: கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
Tel.222 7835
Fax 222 7836

4, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel.021 222 7560
Fax 021 222 7310

E.mail:-thirumurugan @ lycosmail.com

---

அனைவருக்கும் நயினை அம்பாளின் அருள் கிடைக்க
வேண்டுகின்றோம்!

## பிரகாஸ் போக்குவரத்து சேவை

கொழும்பு - கிளிநொச்சி - யாழ்ப்பாணம்

கொழும்பிலிருந்து பொருட்களை வடபகுதிக்கும் அங்கிருந்து விவசாய உற்பத்திப் பொருட்களை மிகவும் குறைந்த கட்டணத்தில் கொழும்பிற்கும் பரிமாற்றம் செய்யும் கோழி மற்றும் விலங்கினங்களின் தரம்வாய்ந்த உணவுகளின் வட மாகாண ஏக விநியோகஸ்தர்கள்

## பிரகாஸ் போக்குவரத்து சேவை

இல. 221, டாம் வீதி,
கொழும்பு - 12.
T.P. No: 011 2543310
011 2543309

இல. 455, 457, கே.கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. No: 2222145
Fax: 2222958

---

நாடும் வீடும் நலம் பெற நாகபூசணியே அருள் பாலிப்பாயாக!

அழகிய தங்க நகைகளின்
தரத்தினை தாரக மந்திரமாகக்
கொண்ட நிறுவனம்

## நிருத்திகா ஜுவல்லர்ஸ்



இல.177 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

நமது சமூகத்தில் நிலவிவரும் குறைபாடுகள் நீங்கவேண்டுமெனில் நாம் எல்லோரும் ஓர் குலம் என்ற உணர்வு ஏற்படவேண்டும்.

-டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி

## யாழ். மாநகர சபைக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்

யாழ்ப்பாண மாநகரசபை நிர்வாகம் யாழ்.நகரத்தின் தூய்மையைப் பேணுவதில் அதீத அக்கறை கொண்டு செயற்படுகின்றது.

யாழ்.மாநகர சபை ஆணையாளர் சி.வீ. கே.சிவஞானம் அவர்கள் ஆணையாளராகப் பதவியேற்றதும் யாழ்.நகரை அழகுபடுத்துவதிலும் அதன் தூய்மையைப் பேணுவதிலும் கூடிய கவனம் செலுத்தி வருகிறார்.

அதன் காரணமாக தெரு ஓரங்களில் குப்பைகூழங்களை போடுவதற்கான கொள்கலன்கள் வைக்கப்பட்டுள்ளன. இருந்தும் அதனைப் பயன்படுத்துவதில் பொதுமக்கள் காட்டி வரும் அசமந்தம் மிகவும் வேதனைக்குரியது.

நாம் வாழும் இக் காலம் கற்காலமன்று. இது கணினிக்காலம். உலகம் முழுவதும் தகவல் தொழிநுட்பத்தில் அதிமுன்னேற்றம்-விஞ்ஞான வளர்ச்சி காரணமாக மனித குலம் விண்வெளியிலும் வீடுகட்டுவதற்கு தயாராகி விட்டது.

இந் நிலையில் எத்தனையோ முயற்சிகளின் மத்தியில், பணச்செலவில் கொள்வனவு செய்யப்பட்டு வீதியோரங்களில் வைக்கப்பட்ட கொள்கலன்களில் குப்பை கூழங்களைப்போடுவதன் மூலம் சூழல் சுத்தம் பேணுவதில் பொதுமக்கள் தயக்கம் காட்டுவது ஏன்?

இன்னமும் அவர்கள் குறுகிய மனப்பாங்குடன் இருக்கிறார்களா? அல்லது சுற்றாடல் சுத்தம் பேணும் அறிவுத்திறனை அவர்கள் பெறவில்லையா ? என்ற கேள்வி எழுகின்றது.

மாநகரத்தின் சுத்தம் பேணும் திட்டத்தை தனித்து யாழ்.மாநகர சபையால் மட்டும் செய்து விடமுடியாது.

நிச்சயமாக பொதுமக்கள் பரிபூரண ஒத்துழைப்பு வழங்கும் போதுதான் யாழ்.மாநகர தூய்மையை பேண முடியும்.

எனினும் அது விடயத்தில் பொது மக்கள் அக்கறையுடையவர்களாக தெரியவில்லை. சுயநலத்தின் அடிப்படையில் அவர்களின் செயற்பாடுகள் உள்ளன.

சுற்றாடல் தூய்மையைப் பேணும் பொறுப்பு யாழ்.மாநகரசபையினுடையதென்பதே அவர்களின் நினைப்பு.

யாழ்.மாநகரசபையில் கடமையாற்றும் சுத்திகரிப்புத்தொழிலாளர்களும் மனிதர்களே என்ற நினைப்பு பொதுமக்களிடம் இருப்பது அவசியம்.

உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகளின் உயர்வுக்கான காரணங்களில் ஒன்று அங்கு வாழும் மக்களின் மனோநிலையாகும்.

அதாவது, தன்னால் தனது குடும்பத்திற்கும் மற்றையவர்களுக்கும் தீங்கு ஏற்பட்டுவிடலாகாது. இதனைக்கடைப்பிடிப்பதே தனது முதற் பணி என்ற எண்ணக்கரு அவர்களின் அக,புறச்செயற்பாடுகளில் அமைந்துள்ளன.

ஆனால் யாழ்ப்பாணத்தில் குப்பைத்தொட்டிகளில் குப்பைகளைப்போடும் மனப்பக்குவம் இல்லை என்பது எமது இனத்தின் பெருமை ,கலாசார -பண்பாட்டு விழுமியங்களுக்கு பெரும் கேடாகும்.

வாழைக்குலையை தமக்கு எடுத்து விட்டு வாழைத்தண்டை வீதியில் போட்டுவிடும் செயல் எத்துணை அபத்தமானது?

இவ்வாறு பொறுப்பற்ற முறையில் வாழைத்தண்டுகளை வீதிகளில் போடுவதால் ஏற்பட்ட -ஏற்படக்கூடிய விபத்துக்களை ஒரு கணம் சிந்தித்தால் இவை தவிர்க்கப்படுமல்லவா?

பொதுமக்களே! உங்களைப்போல் பிறரையும் நேசியுங்கள். அதுவே எமது வாழ்வியலை உயர்த்தும்.

# அமைதிப்படை -02 என்ற பேச்சுக்கே இடமில்லை! இப்படிக் கூறுகிறார் இந்திய அதிகாரி ஒருவர்

(சென்னை)

*தமிழீழ விடுதலைப்புலிகள் இலங்கை அரசு ஆகிய இரண்டு தரப்பிற்கும் இடையில் மீண்டும் ஒரு யுத்தம் ஆரம்பிக்கும் பட்சத்தில் இலங்கை அரசு இந்திய படைகளின் உதவிக்கு கோரிக்கை விடுத்தாலும் கூட 'அமைதிப்படை -02' என்ற பேச்சுக்கே இடமில்லை என பெயர் குறிப்பிட விரும்பாத இந்திய அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.*

அந்த அதிகாரி இது தொடர்பாக தெரிவித்த கருத்துக்கள் வருமாறு, பதினைந்து வருடங்களுக்கு முன்னர் இந்திய அமைதிப்படை பெற்ற கசப்பான அனுபவங்கள் இந்திய மக்களினதும் இந்தியாவின் தலைவிதியை தீர்மானிக்கும் தலைவர்களினதும் மனதில் மிகவும் ஆழமாக பதிந்துள்ளது.

1987ஆம் ஆண்டு ஆடி மாதம் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவினால் அளிக்கப்பட்ட வரவேற்பின் போது முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி துப்பாக்கிப் பிடியால் அடிவாங்கியதில் இருந்து 1990ஆம் ஆண்டுவரையிலான விடுதலைப்புலிகளுடன் இடம்பெற்ற மோதல்களில் ஆயிரத்து 165இந்தியப் படையினர் கொல்லப்பட்டது மட்டுமன்றி 3 ஆயிரத்து 11 படையினர் அங்கவீனமுற்றிருந்தனர்.

இவை அனைத்திற்கும் மேலாக பிரேமதாசா தலைமையிலான இலங்கை அரசு இந்தியப் படையினரை இலங்கை மண் ணில் இருந்து வெளியேற்றுவதற்கே [illegible]க்கியத்துவம் கொடுத்திருந்தார். இந்த கசப்பான அனுபவங்களை இந்தியா மீண்டும் புதுப்பித்துக்கொள்ள தயாரில்லை. அதே நேரம் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இந்தியாவின் மாநில மற்றும் யூனியன் அல குகளால் இந்தியாவின் அரசியல் அனுபவங்களை இலங்கையுடன் பகிர்ந்துகொள்ள இந்தியா தயாராக இருக்கின்றது.

விடுதலைப்புலிகளுக்கும் இலங்கையின் படைகளுக்கும் மீண்டும் ஒரு போர் ஆரம்பிக்கும் பட்சத்தில் இலங்கையின் 23 கோடி அமெரிக்க டொலர்கள் பெறுமதி யான பொருளாதாரம் முற்றாக சீரழியும் நிலையே ஏற்படும். அண்மைக் காலத்தில் இந்திய முதலீட்டாளர்கள் பெருமளவில் இலங்கையில் முதலீடு செய்திருப்பதனால், இன்னொரு யுத்தத்தினை இந்தியா விரும்பவில்லை.

மீண்டும் ஒரு போர் ஆரம்பிக்காமல் இருக்க வேண்டுமெனில் இலங்கை அரசி யல்வாதிகள் ஒரு நாட்டின் பொறுப்பான தலைவர்களாக ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும். மீண்டும் ஒரு போரினை தடுக்க, நோர்வே, ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா மற்றும் ஜப்பான் போன்ற நாடு களுடன் இணைந்து செயலாற்றவே இந் தியா விரும்புகின்றது. இந் தத்தகவலையே இந்தியாவின் வெளியுறவுச் செயலாளர் சியாம் சரண் மூலம் இந்திய பிரதமர் மன்மோகன்சிங் இலங்கை அரசிற்கு அண்மையில் தெரிவித்திருந்தார். (கு)

# சமுர்த்தி அதிகார சபையின் அபி.திட்டங்கள் நடைமுறைக்கு

காரைநகர் பிரதேச செயலர்பிரிவில் இலங்கை சமுர்த்தி அதிகாரசபையினால் பல நுண் கருத்திட்டங்கள் நடை முறைப் படுத் தப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுகின்றது.

காரை மேற்கு கிராமத்தில் நாவற்கண்டி வீதியும், காரை வடமேற்கு கிராமத்தில் நன்னீர் பொதுக்கிணறும், காரை கிழக்கு கிராமத்தில் இடைப்பிட்டி மில் வீதியும், காரை தென் கிழக்கு கிராமத்தில் ஆவத்தனை–களபூமி வீதியும், காரை தெற்கு கிராமத்தில் ஊரி அன்டரசன் பொது மண்டபம் மற்றும் மலசல கூடமும், காரை தென்மேற்கு கிராமத்தில் கருங்காலி முருகன் ஆலய– கேசடை வீதியும், காரைவடக்கு கிராமத்தில் தேவரடைப்பு வீதியும், காரை வடகிழக்கு கிராமத்தில் நன்னீர்க் கிணறும் காரை மத்திய கிராமத்தில் குடிநீர் கிணறுமாக 9 கருத்திட்டங்கள் நடைமுறைப்பட்டு வருகின்றன.

எவ்வொன்றும் தலா முப்பத்தையாயிரம் (35,000 ரூபா பெறுமதியான இத்திட்டத்திற்கு சமுர்த்தி அதிகாரசபையினால் மூன்று இலட்சத்து பதினையாயிரம் ரூபா காசோலை காரைநகர் பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப–246)

# மன்னார் மாவட்டத்தில் பல் வைத்தியர் பொ.சு.பரிசோதகர் வெற்றிடங்கள்

## செல்வம் அடைக்கலநாதன் முயற்சிக்கு கைமேல் பலன்

(மன்னார்)

மன்னார் வைத்திய சுகாதார சேவை பிரிவிற்கு 7 பல் வைத்தியர்கள் சேவை செய்யவேண்டிய இடத்தில் 4 பேர் மட்டும் நியமனம் செய்யப்பட்டு 3 பல்வைத்தியர்களுக்கான இடம் வெற்றிடமாகவே இருந்தது.

சென்ற வருடம் ஒப்பந்த அடிப்படையில் இருவர் நியமனம் பெற்றனர். 2006ஆம் ஆண்டு இலங்கை முழுவதற்குமான பல் வைத்தியருக்கான வெற்றிடங்கள் காணப்படும் இடங்கள் விளம்பரப்படுத்தப்பட்ட போது மன்னார் மாவட்டம் அதில் இடம்பெறாமை அவதானிக்கப்பட்டு இவ்விடயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அவ்விடயம் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்திய கலாநிதி நிகால் ஜெயதிலகவின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

வெற்றிட விளம்பரத்தில் மன்னார் மாவட்டம் காணப்படாததால் ஒப்பந்த அடிப்படை நியமனம் பெற்றவர்கள் நிரந்தர நியமனத்திற்கு மனுச்செய்யும் பட்சத்தில் மன்னார். மாவட்டம் இவ்விருவரின் சேவையினையும் இழக்க நேரும் என்பது அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. மேலதிக செயலாளர் இது விடயத்தில் உடனடி கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்தன் பேரில் இவ்விடயம் பொதுச்சேவை ஆணைக்குழுவின் கவனத்திற்குக்கொண்டுவரப்பட்டு மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் வெற்றிடம் இருப்பதை விளம்பரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பல் வைத்தியத்திற்கு பொறுப்பான பிரதிப்பணிப்பாளரினால் நாடாளுமன்ற உறுப்பினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மன்னார் மாவட்டத்தில் சுகாதார பரிசோதர்களுக்கான வெற்றிடம் அநேகம் இருப்பதும் தற்போது பொது சுகாதார பரிசோதகர்களாகப் பணிபுரிவோர் வேறு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாய் இருப்பதும் சுட்டிக்காட்டப்பட்டு இவர்களும் மாற்றம் செய்யப்படும் பட்சத்தில் பொது சுகாதார பரிசோதர்களின் வெற்றிடம் பல மடங்காகும் என்பதும் எடுத்துக்காட்டப்பட்டு தற்போது இம்மாவட்டத்தில் இருந்து தெரிவாகி தமது பயிற்சியை முடித்து வெளியேறி இருக்கும் நால்வருக்கு, மன்னார் மாவட்டத்தில் நியமனம் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கையும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனால் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளருக்கு கடிதமூலம் கேட்டப்பட்டிருந்தது. இதற்கு சாதகமான பதில் மேலதிக செயலாளரிடம் இருந்து பெறப்பட்டுள்ளது. (ம)

# கதிர்காம கந்தன் ஆலய வருடாந்த உற்சவம்

(கொழும்பு)

சரித்திரப்புகழ் பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆகஸ்ட் 10ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவுடன் உற்சவம் நிறைவடைகின்றது. கதிர்காம ஆலய உற்சவம் தொடர்பான உயர் மட்டக்கூட்டம் மொனறாகலை மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

திருவிழாவையெட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள், சுகாதாரம் , குடிநீர், போக்குவரத்து, என்பன குறித்தும் இங்கு ஆராயப்பட்டது. கதிர்காமக்கந்தன் கொடியேற்றத்திற்கு முன்னதாக கதிர்காமம் பள்ளிவாசல் கொடியேற்றப்படும் என பள்ளிவாசலின் தர்மகர்த்தா எம்.எச்.அப்துல்காபர் தெரிவித்தார். இது வழமையாக நடைபெறும் நிகழ்வாகும்.

கதிர்காமம் திஸ்ஸ மாகரம பகுதிகளில் உள்ள மதுபான கடைகள் யூலை 26 முதல் ஆகஸ்ட் பத்துவரையும் மூடப்பட்டிருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க–7)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



இறைவனை விட்டு விட்டு உங்கள் மனம் உணவைப்பற்றியே நினைத்துக்கொண்டிருக்குமானால் நீங்கள் எப்படி வழிபாட்டை பக்தியோடு செய்ய முடியும்?

சுவாமி விவேகானந்தர்

## இராணுவம் மீது...

இதேவேளை பருத்தித்துறை கந்தஉடையார் சந்தியில் நேற்று மதியம் 12 மணிக்கு காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர்மீது கைக்குண்டுத் தாக்குதல் இடம் பெற்றது.

இத் தாக்குதலின்போது சேதம் எதுவும் இடம்பெறவில்லை. இச் சம்பவத்தையடுத்து படையினர் சந்தேகத்தின் பேரில் ஐந்து பேரை கைது செய்துள்ளனர்.

இச் சம்பவத்தையடுத்து அப் பகுதியில் பதற்றம் நிலவியது. வாகனப்போக்குவரத்தும் ஸ்தம்பிதமடைந்தது. சற்று நேரத்தின்பின் நிலைமை வழமைக்குத் திரும்பியது. (ச-101,52)

## [illegible]...

யடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற சென்னைப் பொலிஸ் அதிகாரிகள் இது தொடர்பான நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்ததையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (ச-5)


**யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம்**
**வட்டுக்கோட்டை**

உலோக வார்ப்பு தொழிற்பயிற்சி *(காலம் 6 மாதங்கள்)*

(அலுமினியம், பித்தளை, சினச்சட்டி (Cast- Iron)

*Six month Certificate Course in Foundry Practice*

6 மாத காலத்தில் சுய தொழில் ஈடுபட விரும்பும் அல்லது தொழில் வாய்ப்பைத் தேடி கொள்ள விரும்பும் ஆண்டு 10 வரை படித்த மாணவர்களுக்கு கற்பிக்கும் பயிற்சி நெறி.

உற்பத்தி செய்யும் பொருட்கள்.

- நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள்

பம்ப் கேசிங், இம்பெளர், டிஸ்டன் பீஸ், என்சீல்ட், கூலிங் வேன் *(Cooling fan)* வேன் கவர் *(Fan Cover)*

- சமையல் பாத்திரங்கள்

தாச்சி, தோசைக்கல் போன்றவை

குறிப்பு:-

*ஒழுங்கான பயிலுநருக்கு நாளாந்த ஊக்குவிப்புப்படி வழங்கப்படும்.*
*விண்ணப்பப் படிவம் எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்.*
*தொழிற் பயிற்சி 17.07.2006 இல் ஆரம்பிக்கப்படும்.*
*விபரங்களுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-*

**DIRECTOR**
*Jaffna College Institute Of Technology*
**Vaddukoddai**

*E.mail:Jcit @ sltnet.lk* *T.P.No:-060 221 3139*

(c-அ-395)


## இறுதிப் போட்டி

பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வரும் உதைபந்தாட்ட போட்டியில் 15 வயதிற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டி இன்று மாலை 4 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இறுதிப் போட்டியில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலையை எதிர்த்து குருநகர் சென். ஜோன்ஸ் பாடசாலை மோதவுள்ளது. இவ் விளையாட்டு நிகழ்வுக்கு யாழ். மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் கிளிபேட் அன்ரனி பிரதம விருந்தினராக கலந்து கொள்கின்றார். (ச-110)

## வழிகாட்டல் வகுப்பு

இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சைகளுக்கு தோற்றவுள்ளவர்களுக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் நாளை காலை 9.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. இவ் வகுப்பில் கிரகித்தல் தொடர்பாக க.தெய்வேந்திரமும் விடய ஆய்வு தொடர்பாக கே. பரந்தாமனும் விளக்கவுள்ளனர். (ச-5)

## ஆயுதங்...

எனக்கூறியுள்ளார். விடுதலைப் புலிகளின் வெடிமருந்தேற்றப்பட்ட படகுகளை தாக்குதல் நடத்தும் வகை யில் சீனாவின் தயாரிப்பிலான 30 மில்லிமீற்றர் ரகமுடைய துப்பாக்கிகளை கொள்வனவு செய்வதற்கு இலங்கை திட்டமிட்டுள்ளதாக த ஐ லண்ட் பத்திரிகை ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## காணாமல்...

திருநாவுக்கரசுநாயனார் அசோகன், ஜனவரி 12 இல் தெல்லிப்பளையில் கைதான மல்லாகத்தைச் சேர்ந்த ரட்ணம் ஆனந்தராசா, ஏப்ரல் 20 இல் கைதான கதிரவேலு இராகவன் ஆகியோரே தென்னிலங்கைச் சிறைகளில் இருப்பவர்கள் என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## மனித உரிமைகள் ஆணைக்...

இலங்கையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அதன் இணைப்பதிகாரி சுவேந்திரராஜா, சட்டத்தரணி றெமிடியல், விசாரணை அதிகாரி மொறின் ஆகியோரும் இராணுவத் தரப்பில் சந்திரசிறி உட்பட உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நேற்றைய சந்திப்பில் எடுக்கப்பட்ட சில முடிவுகள் வருமாறு,

☆ காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை அவர்களின் உறவினர்கள் சந்திக்க இராணுவம் அனுமதித்துள்ளது.

இது தொடர்பாக தமக்கு அறிவித்துவிட்டு மனித உரிமைகள் ஆணைக்குழு ஊடாக சந்திக்க முடியும்.

☆ இராணுவம் கைது செய்பவர்களுக்கு கைது தொடர்பாக பற்றுச் சீட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கும் இது தொடர்பான பற்றுச் சீட்டு வழங்கவும் நடவடிக்கை.

☆ கைது தொடர்பாக உடனடியாக மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு அறிவிக்க இராணுவம் இணக்கம்.

☆ வீதிகளில் இளைஞர்களும் யுவதிகளும் இராணுவத்தினரால் கண்டபடி தாக்குதல் முற்றாக நிறுத்துவதற்கு உறுதியளிப்பு.

தாக்கப்பட்டதுடன் தனக்கு தகவல் அளித்தால் உரியவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என இராணுவத் தளபதி தெரிவிப்பு.

☆ யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் பூரணமாக நிலைநாட்டவும் தளபதி உறுதியளிப்பு.

☆ கொக்குவிலில் தாக்கப்பட்ட பேருந்து சாரதிக்கு மற்றும் நடத்துநருக்கு நஷ்டஈடு வழங்க இராணுவம் இணக்கம்.

☆ எந்தவொரு இராணுவ முகாமிற்கும் இராணுவத் தளபதியின் அனுமதியுடன் சென்று சோதனையிட இராணுவம் பூரண அனுமதி.

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் சென்று விசாரணை செய்வதற்கும் அனுமதி அளிப்பு.

☆ வீட்டு மதிலுக்கு வெளிப்புறம் இராணுவத்தினர் கடமையில் இருப்பர். எக் காரணம் கொண்டும் வீடுகளினுள் புகுவதற்கு அனுமதி இல்லை.

☆ கொள்ளைச் சம்பவத்திற்கும் இராணுவத்திற்கும் எதுவித தொடர்பில்லை. தேவையற்ற விதத்தில் பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்த வேண்டாம் எனக் கோரிக்கை.

☆ இதேவேளை மேற்குறிப்பிட்ட சம்பவங்கள் தொடர்பாக இராணுவத்தினால் ஏற்படும் எந்தவொரு அசௌகரியங்கள் குறித்தும் உடனடியாக மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு தெரியப்படுத்தினால் அடுத்த நிமிடத்தில் அது தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டு நடவடிக்க எடுக்கப்படும் என மனித உரிமைகள் ஆணைக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)







இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.8 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.07.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.